கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(18.08.2019 - 18 ஆவணி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 214, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



# உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னரான சூழ்நிலை குறித்து ஆராயப்பட்டவை தொடர்பான இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை

இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவையினால் கடந்த வாரம் கூட்டமொன்று நடாத்தப்பட்டதோடு, அதில் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னரான நாட்டின் சூழ்நிலைக் குறித்து விமர்சிக்கப்பட்டதோடு, இத்தாக்குதலின் இறுதி விளைவாக 250 குடிமக்களும் மற்றும் வெளிநாட்டவர்களும் உயிரிழந்ததோடு, நூற்றுக்கணக்கானோர் காயப்பட்டதை முன்னிட்டு இவை முக்கியமாக விமர்சிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது.

இத்தாக்குதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்து அவர்களை நீதியின் முன் கொண்டு வருமாறு, நாம் அரசாங்கத்திடம் தாழ்மையோடு கோரிக்கை விடுத்திருந்தோம். எனினும் இச்சூழ்நிலைக் குறித்து நீதியான, உண்மையான விசாரணைகள் எதுவும் இன்னும் இடம்பெறவில்லை என்பதை இலங்கை கத்தோலிக்க ஆயர்ப் பேரவை தமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிக்கின்றது. பல குழுக்களை நிறுவிக்கொண்டு, பாதுகாப்புப் பிரிவின் பாரதூரமான குறைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார் என்பதை, முதற்கண் பணியாக விசாரணை செய்வதற்கு முயற்சிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். எனினும் இம்முயற்சியின் பிரதிபலனாக அமைய வேண்டுமென நாம் கேட்டுக்கொள்வது, நீதி வழங்கல் தொடர்பான பிரச்சினைகளும், இவ்விசாரணைகளின் இறுதி முடிவாக அமைய வேண்டியது, குற்றவாளிகள் யார் என்பதும், இதற்காக உதவியவர்கள் மற்றும் எவ்விதத்திலாவது இக்கொடூரமான செயலுக்கு பங்களித்தவர்கள் போன்றோர்களை ஆணித்தரமாக இனங்கான வேண்டும் என்பதுமாகும்....

02

## வாழ்த்துகின்றோம்.

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளை இம்மாதம் 31ந் திகதி நினைவுகூறுகின்றார். இவர் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.



## ஆயர் திருநிலைப்படுத்தல் நினைவுநாள்

தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளையும், பெயர்கொண்ட திருநாளையும், இம்மாதம் 31ந் திகதி நினைவுகூறுகின்றார். இவர் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.



மேதகு ஆயர். றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை காலி மறைமாவட்டம்

## எனக்கு முத்தம் ஒன்று தாங்க!

டோனி என்ற சிறுமி தனது அறுவைச் சிகிச்சைக்கு தான் செல்லும் முன் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடம் தனக்கு முத்தம் ஒன்று தருமாறு கேட்டது. கர்தினால் ஆண்டகை குழந்தையை அன்போடு அரவணைத்து தனது அன்பையும், பாசத்தையும் அக்குழந்தைக்கு வழங்கி ஆசீர்வதித்தார்.



## ஞாயிறு – போயா தின பிரத்தியேக வகுப்பு தடைவிதிக்க பேராயரினால் மேல் நீதிமன்றத்திற்கு இடைக்கால மனு.

கொழும்பு உயர்மறைமாவட்டத்திற்கு மாத்திரமல்ல மற்றைய மறைமாவட்டங்களிலும் ஞாயிறு பிரத்தியேக வகுப்புகள் நடப்பதால் பல மாணவர்கள் மறைபாட-சாலைக்கு வர முடியாத நிலைத் தோன்றியுள்ளது. 5ம் வகுப்பு மாணவர்கள் புலமைப் பரீட்சைக்காகவும், சா/தர மாணவர்கள் பரீட்சைக்காகவும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்வதால் அவர்களால் மறைப்பாட-சாலைக்கு வரமுடியாததினால் அவர்கள் இறைவழியில் செல்வது தடைப்படுகின்றது. அது மாத்திரமல்ல அவர்களின் அறநெறி தவிர்க்கப்படுகிறது. சமுதாய அநீதிகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இவைப்பற்றி ஆராய்ந்து ஞாயிறு தினங்களில் நடத்தப்படும் பிரத்தியேக வகுப்புகள் இரத்து செய்யும் மனுமொன்று எமது மறைக்கல்வி நிலைய ஆயர்களினால் 2017 ஆடி மாதம் தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் பல சந்தர்ப்பங்களின்போதும் மனுக்கள் மூலமும் கலந்துரையாடல்களிலும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## அருள்வளம் நிறைந்து ஆன்மீக மணங் கமழும் மடுமாதா திருவிழா



மடுமாதா திருத்தல ஆவணித் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் 06.08.2019 செவ்வாய்க்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. மடுமாதா திருத்தல கொடியினை ஆலய பரிபாலகர் அருட்தந்தை ச.ஜொ. பெப்பி சோசை அடிகளார் ஏற்றி வைத்து நவநாட்கள் ஆரம்பிக்கிப்பட்டன. 15ம் திகதி திருவிழா கொண்டாடப்படுகின்றது.

## யார் என்ன சொன்னாலும் பாஸ்கு ஞாயிறு தாக்குதலிற்கு உள்ளான மக்களுக்கான நியாயத்தை பெற்றுக்கொடுக்க முன்னிற்பேன்.

பாஸ்கு ஞாயிறு நடந்த அசம்பாவிதத்திற்காக நியாயம் பெற்றுக்கொடுக்க முன்நிற்பேன் எனவும், அவர்களுக்காக முன்னிற்பதுடன் அவர்களை எப்போதும் கைவிட மாட்டேன் என்றும் கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். கடந்த சனி நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் நடந்த பாஸ்கு அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 245பேக்கும் வைத்திய, வாழ்வாதார வழியமைக்குவிதமாக உதவிப்பணம் வழங்கும்போது அம்மக்களிடம் கூறினார்.



**ஆண்டவரே, எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும். (தி.பா 40)**

# கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் அறிவித்தல்

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையாகிய என்னால் மரியாயின் மாசற்ற திருஇருதயச் சபை அருட்சகோதரிகளின் பொதுச் சங்கமானது மறுகட்டமைக்கப்பட்டதோடு, இது உயர்மறைமாவட்டத்தின் ஒரு சபையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பெயரலவிலான தலைமைத்துவம் (Patron) கொழும்பு உயர்மமைாவட்ட பேராயர் ஏற்கின்றார். இந்த பொதுச் சங்கத்தின் சட்டங்கள் பேராயரால் (என்னால்) திருத்தப்பட்டு, உரோமையிலுள்ள விசுவாச உயிரூட்ட சங்கத்திற்கு (பாப்பிறை மறைப்பரப்பு), (Evangelization of Peoples) பரிசீலனைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் (பாப்பிறையின்) பரிந்துரைகள் புதிய மற்றும் இறுதி உரையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்த புதிய சட்டங்களை கடைப்பிடிப்பதில், சங்கத்தின் புதிய இலக்குகளை எதிர்காலத்தில் முன்னேற்றுவதற்காக ஒரு இடைக்காலத்திற்கு ஒரு ஆளும் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்புதிய ஆணைக்குழு ஒரு கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயரின் மேற்பார்வையின் கீழ், ஒரு குருவானவரினால் சபை நிர்வாக உதவியாளரின் ஒருங்கிணைப்புடன் செயல்படும்.

இதன் உருவாக்கமானது, ஒரு புதிய இயக்குனரின் கீழ், அருட்சகோதரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான நடைமுறை எளிதாக்கப்படும். புதிய ஆர்வலர்களை (Aspirants) ஆட்சேர்ப்பு செய்வது சட்டங்களின் விதிகளின்படி தொடங்கும் மற்றும் துறவற வாழ்க்கை குறித்த நியதிச் சட்டத்தின் பரிந்துரைகளைத் தொடர்ந்து உருவாக்கும் பணிகள் தொடரக்கூடும். இச்சபையின் வேட்புமனு பரிசீலிக்க பதினாறு வயதுக்கு மேற்பட்ட பொருத்தமான புதிய வேட்பாளர்களை பரிந்துரைக்க, பங்குத்தந்தையர்கள் ஆர்வத்துடன் ஊக்குவிக்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். இவ் ஆணைக்குழுவின் (Council) செயல்பாட்டு மையம் மற்றும் போஸ்டுலான்சி நிலையம் (House of Postulancy) களனியில் பிலப்பிட்டியவிலுள்ள மரியாயின் மாசற்ற திருஇருதயச் சபையின் (SMI) அருட்சகோதரிகளின் இல்லத்தில் அமையப்பெற்றிருக்கும். இறாகமை தேவத்தையில் நோவிசியேட் (Novitiate) கன்னியர் மடம் அமையப்பெறும்.

## தலைமைத்துவ அமைப்பு

**பெயரலவிளானதலைவர்:** கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் (Patron) ஆண்டகை

**சபையின் நிர்வாகத் துணைவர் :** அருட்பணி. ப்.ஃரிலி முத்துகுடாரச்சி (Ecclesiastical Assistant)

**சிரேஷ்ட பொதுத் தலைவி :** அருட்சகோதரி. அமாத்தா அனுஷா சேனாநாயக்க (Superior General)

**துணை சிரேஷ்ட அருட்சகோதரி :** அருட்சகோதரி. பெயட்ரா ஜென்சி செபஸ்டியன் (Vicaress General)

**துணை சிரேஷ்ட அருட்சகோதரி :**

- அருட்சகோதரி. ஜியோவின்னா சம்பிக்கா பெர்னாண்டோ உருவாக்க இயக்குனர் (Council Members)
- அருட்சகோதரி. கப்ரியெலா வினோதர்ஷினி சந்தனராஜ் - பொதுச் பொருளாளர்
- அருட்சகோதரி. ரப்.ஃஏலா சன்ஞீவனி அழஹகோன் - பொதுச் செயலாளர்
- அருட்சகோதரி. எமில் ப்பிலோமினா மேரியன் - ஆன்மீக ஊக்குவிப்பாளர்

நாம் இச்சங்கத்தின் அனைத்து விதமான பணிகளையும் எமது நாட்டின் பாதுகாவலியான எம் இலங்கை அன்னையினதும் மற்றும் இலங்கையின் புனிதரான யோசேவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரையின் மீதும் வேண்டிநிற்கின்றோம். மேலும் எமது இறைத்தந்தையின் ஆசீர்வாதங்களை எம் உறுப்பினர்களின் மீது பொழியுமாறு வேண்டுகின்றோம்.

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்
உயர்மறைமாவட்டப் பேராயர்

அருட்பணி. டெனின்டன் சுபாசிங்ஹ
நிர்வாகச் செயலாளர்

**2019 ஆவணி 5ம் நாள்**

## 01 உயிர்த்த ஞாயிறு தின...

துர்அதிஷ்டவசமாக இவை பற்றியதாக நாம் எவ்விதமான சாதகமான அறிகுறிகளை பார்க்கக் கூடியதாகவே இல்லை. முப்படை ஜனாதிபதி விசாரணை குழுவின் அறிக்கையை எம்மால் இன்றும் கண்கொண்டு பார்வையிட முடியாதுள்ளது. பொதுமக்களும் இவற்றின் அறிக்கை குறித்து விமர்சனையோடு அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கமானது, இந்நாட்டிலுள்ளவர்கள் அனைவரும் சமத்துவத்தோடு நீதியை வழங்குகின்றது எனும் உறுதியான அத்தாட்சியை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும். பொதுமக்களின் மனதில் இன்னும் பயமும், சந்தேகமும் நிறைந்துள்ளது. எவ்வாறாயினும் நாம் எமது முப்படையினரினதும் பொலிஸ் தரப்பினரினதும் அர்ப்பணிப்பை பாராட்டுவதற்கு கடமைப்பட்டுள்ளோம். விசேடவிதமாக இவர்களின் பணி மூலம் இருளான இந்நிலையிலிருந்து மனித உயிர்களை பாதுகாப்பதற்கு இவர்கள் முன்வந்துள்ளனர்.

எனவே, நாம் மீண்டும் எம் நாட்டு அரசாங்கத்திடமும், அரசியல் தலைவர்களிடமும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதாவது, நீதி நேர்மையுடனான, பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது என்பதாகும். அத்தோடு அரசாங்கத்தின் பல்வேறுபட்ட பணியகங்களினால் வழங்கிய உதவிகளை பாராட்டுவதோடு, நாம் மீண்டும் மீண்டும் வேண்டி நிற்பது நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதோடு, இதற்கு பொறுப்புக் கூறவேண்டிய அனைவரையும் நீதியின் முன்னால் கொண்டு வரவேண்டுமென்பதேயாகும்.

எம் நாட்டிற்காக தொடர்ந்தும் மன்றாடும்படியும், எம் தாய்நாட்டிற்கு என்றும் நிலைத்து நிற்கும் சமாதானமும், சமத்துவமும் கிடைக்கப்பெற வேண்டுமென மன்றாடும் படியும் எம் நாட்டு மக்களிடம் வேண்டி நிற்கின்றோம்.

**மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS**
**தலைவர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**பதுளை மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**உபதலைவர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**யாழ் மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. J. D. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை**
**செயலர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்**

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை. கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**

**மேதகு. J. வியானி பர்னாந்து ஆண்டகை**
**கண்டி மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. ஹெரல்ட் A. பெரேரா ஆண்டகை**
**குருநாகல் மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. நோர்பட் M அந்திராடி (O.M.I) ஆண்டகை**
**அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை**
**சிலாபம் மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. ரேமன் K. விக்ரமசிங்க ஆண்டகை**
**காலி மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. கிளீட்டஸ் C. பெரேரா (O.S.B) ஆண்டகை**
**இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை. மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. F. L. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை**
**மன்னார் மறைமாவட்ட ஆயர்**

**மேதகு. மெக்ஸ்வல் G. சில்வா ஆண்டகை. கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்**

**மேதகு நோயல் C. இம்மானுவேல் ஆண்டகை**
**திருகோணமலை மறைமாவட்ட ஆயர்**

**2019 ஆவணி 08**

# 25வது ஆண்டு நிறைவு விழா



**செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கின் முன்னாள் பங்குத்தந்தை பீற்றர் சுபராஜ் அடிகளாரின் குருத்துவ வாழ்வில் யூபிலியை முன்னிட்டு பங்கு மக்கள் நன்றி கூறும் முகமாக 28.07.2019 அன்று காலை 7.30 மணித் சிறப்பு திருப்பலியை ஒப்புக்கொடுத்து அடிகளாரை வாழ்த்தினர். அவற்றில் சில நிகழ்வுகள். படங்கள் : டிக்சன் பர்னாந்து**



**அருட்பணி. பிரகாஷ் பர்னாந்து அடிகளார் 25வது யூபிலி ஆண்டு நிறைவை தனது குடும்பத்தினருடனும், அவரோடு குருப்பட்டம் பெற்ற சக அருட்தந்தையர்களோடு இணைந்து 03.08.2019 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மட்டக்குளி புனித மரியாள் ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்து நன்றி செலுத்தினார். அவற்றில் சில நிகழ்வுகள்.**



76வது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் இம்மாதம் 2ம், 3ம் திகதிகளில் (வெள்ளி /சனி) கண்டி மறைமாவட்டத்தில் அமைந்துள்ள அம்பிட்டிய தேசிய குருமட மெய்யியல் பிரிவு வளாகத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூற்றிற்கும் அதிகமான இளையோர் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களிலிருந்தும் பங்கு பற்றியதுடன் யாழ்ப்பாண மறைவட்டத்திலிருந்தம் 7 இளையோர்கள் கலந்துகொண்டார்கள். அத்துடன் 77வது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் கார்த்திகை மாதம் சிலாபம் மறைமாவட்டத்தில் நடைபெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
18 ஆவணி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# “பிறர் உனக்கு ஏற்படுத்தும் துன்பங்களை நீ பிறருக்கு ஏற்படுத்தாதே”

இம்மாதம் 15ம் திகதி நாம் அனைவரும் அன்னை மரியாவின் விண்ணேற்பை நினைவுகூறுகின்றோம். மரியாவின் விண்ணேற்பு என்பது இறைவன் மரியாவுக்கு அளித்த இறுதி புதுமையாகும். “இதோ ஆண்டவரின் அடிமை” என்று கூறி தன்னை முழுமையாக நிறைவாக இறுதிவரைக்கும் இறைவனுக்கு அர்ப்பணித்தப்படியால் மரியன்னை இறைவனால் மகிமைப்படுத்தப்பட்ட நிகழ்வுதான் இவ்விண்ணேற்பு. அதாவது தன் மகன் இயேசுவின் பணிவாழ்விலும் பாடுகளிலும் முழுமையாக பங்கேற்று அவரது உயிர்ப்பு மற்றும் விண்ணேற்பிலும் பங்கேற்ற நிறைமகிமை நிகழ்வாகும்.

இயேசு உயிர்ப்பு வழியாக நம்மை விட்டு பிரிந்துவிடவில்லை மாறாக வானகத்தந்தையின் வலப்புறம் மாட்சிமையுடன் வீற்றிருந்து நமக்கு ஒரு வாழ்வை அளித்துள்ளார். இந்த வாழ்வுக்குத் தேவையானவற்றை இறைவன் நமக்கு வழங்குவார் என்ற இறை நம்பிக்கை வேண்டும். “எதை உண்போம்? எதை குடிப்போம்? எதை அணிவோம்?” என்று கவலைப்படுவது கடவுளின் தந்தைக்குரிய பராமரிப்புத் தன்மையில் நமக்கிருக்க வேண்டிய பிள்ளைக்குரிய நம்பிக்கை உணர்வுக்கும் முரணானது. நம்மால் இயன்றதைச் செய்து, வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்வோம் எஞ்சியதைக் கடவுள் கவனித்துக் கொள்வார் என்ற மனநிலை நமக்குத் தேவை.

இறையாட்சி மதிப்பீடுகளான அன்பு, இரக்கம், நீதி, சமத்துவம் போன்ற சொற்களைச் செயற்படுத்துவதில் மட்டும் நாம் கவலைப்பட வேண்டும். இவையே மானிட நல்வாழ்வுக்குத் தேவையானவை. இயேசுவின் மீட்புப் பணியில் இடம்பெற்றவை. “கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்” என்ற இயேசுவின் நம்பிக்கையூட்டும் ஆணைகள், மக்களுக்கும் தந்தை கடவுளுக்கும் இடையே வளர்க்கப்படவேண்டிய நெருங்கிய உறவுக்கு ஓர் அடித்தளம். நமது இன்ப துன்பங்களிலும், வெற்றி தோல்விகளிலும் அவர் நமக்குக் கைகொடுத்துக் கொண்டே இருக்கிறார் என்ற நம்பிக்கை உணர்வுதான் நாம் அவரோடு கொள்ளவேண்டிய உறவின் நங்கூரம்.

“கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்” என்ற இயேசுவின் அடித்தளமான சொற்கள் அவர் தம் இறைத்தந்தையின் சார்பாக அக்கறையுடனும், கரிசனையுடனும் நமக்குத் தரும் வேண்டுகோள்கள். தந்தையோடு நாமொரு நிரந்தரமான உறவை ஏற்படுத்திக் கொள்ளும் வழிகளாகும். மனித நேயத்தையும், ஒற்றுமை உணர்வுகளையும் உருவாக்க வழிகாட்டியது இயேசுவின் பொன்விதி. இது உலக வரலாற்றில் பல சமயத் தலைவர்கள் வழியாக எதிரொலித்துள்ளது. புத்தரும், கன்பூசியசும் “பிறர் உனக்குச் செய்யக் கூடாது என்று நீ விரும்புதை, பிறருக்கு நீ செய்யாதே” என்று போதித்தனர். கிரேக்க வரலாற்றிலே ஓமர், எரோதிதுஸ் போன்ற அறிஞர்கள் “பிறர் உனக்கு ஏற்படுத்தும் துன்பங்களை நீ பிறருக்கு ஏற்படுத்தாதே” என்றனர். இயேசுவின் பொன்விதியானது கிறிஸ்தவர்களாகிய எமது வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும், தாக்கத்தை ஏற்படுத்துமானால் எமது வாழ்வில் துன்பங்கள் இல்லை, கவலைகள் இல்லை, தோல்விகள் இல்லை, பிரச்சினைகள் இல்லை, என்றுமே இறைவனுக்குள் மகிழ்ந்து வாழலாம்.

**இறையாசிருடன் ஆசிரியர்**

# வன்முறை



இன்று எல்லா இடங்களிலும் வன்முறை அதிகரித்திருக்கிறது என்று நாம் வருத்தப்படுகின்றோம். செய்தித்தாள்களைத் திறந்தால், அவை முழுவதிலும் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களே நிறைந்திருக்கின்றன. நம்மை நாமே நொந்துகொள்கிறோம்.

சமுதாயத்தைப் பற்றி விமர்சிக்கின்றபோது, “அந்தச் சமுதாயத்தில் இருந்து நாம் மட்டும் தனித் தீவாக ஒதுங்கி இருப்பது போல் நமக்கு ஒரு எண்ணம்”

வன்முறை என்பது தனியாக நிகழ்வது இல்லை. அது பலரின் கூட்டு முயற்சியாலும் நிகழலாம். அவரது தனிப்பட்ட உணர்வின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவும் இருக்கலாம். நாம் அனைவருமே வன்மத்தை மனதிலே தேக்கி வைத்திருக்கிறோம்.

வன்மம் மோசம் என்று கூறுவதற்குக் காரணம் அது நம் மூலமாகத்தான் வெளிப்பட வேண்டுமென்பது இல்லை. அது இன்னொருவர் மூலமாகக்கூட வெளிப்படலாம். ஒருமித்த உள்ளுணர்வு (collective consciousness) என்கிற ஒன்றுண்டு. நாம் தேக்கி வைத்திருக்கிற வன்மம் வேறொருவர் மூலம் வெளிப்படமுடியும்.

நாம் இன்று வெளிப்படுத்தாமல் அடைகாக்கிற கோபம், இன்னொரு நாள் குஞ்சு பொரித்து வெளியே வரலாம். நாம் இன்று கட்டுப்படுத்தி வைத்திருக்கிற கோபம் இன்னொரு நாள் தேவையில்லாதபோது பீறிட்டுக்கொண்டு எழலாம்.

கோபப்பட வேண்டியவர்கள் மீது நாம் படாத கோபம், அப்பாவிகள் மீது திணிக்கப்படலாம். இதை நாம் உணர்ந்துகொண்டால், நம்மிடம் இருக்கின்ற வன்மத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக நீக்கமுடியும். நாம் நம்மிடம் இருக்கும் வன்மத்தைக் குறைக்கக் குறைக்க உலகமும் அன்புமயமாகிறது என்பதை உணரவேண்டும்.

உயிரற்ற பொருட்களின் மீது கூட, நாம் வன்மத்தோடு நடந்துகொள்ளக்கூடாது. சுவரின் மீது எச்சிலைத் துப்புவது கூட ஒருவிதமான வன்மம் தான். நாற்காலியை வேகமாகத் தூக்கி அதற்கு வலிக்கும்படி இழுப்பது கூட ஒருவிதமான வன்மம் தான். புத்தகத்தின் பக்கங்களை மடக்குவதுகூட அதைக் கிள்ளுவதற்குச் சமமாகும். செருப்பை வேகமாகக் கழற்றி எறிவதுகூட அதை உதாசீனப்படுத்துவதன் பொருள்தான்.

ஒரு செடியை தேவையில்லாமல் பிடுங்கும்போதும் இலையைத் தேவையில்லாமல் பறிக்கிறபோதும், ஒரு நாயைக் கல்லால் அடிக்கிறபோதும் நாம் வன்முறையாளர்களாக மாறுகிறோம்.

இப்படிச் சின்னச்சின்ன செயல்களின்

> “கோபப்பட வேண்டியவர்கள் மீது நாம் படாத கோபம், அப்பாவிகள் மீது திணிக்கப்படலாம். இதை நாம் உணர்ந்துகொண்டால், நம்மிடம் இருக்கின்ற வன்மத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக நீக்கமுடியும்.”


மூலமாகக் கூட வன்மம் ஊற்றெடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த வன்மம் ஒருநாள் பெருகுகிறபோது, அந்த வெள்ளத்தில் நாம் அடித்துச் செல்லப்படுகிறோம். நாம் எறிந்த அம்புகள் நம்மை நோக்கியே திரும்ப வருகின்றன. நாம் செலுத்திய கற்கள் நம்மைப் பதம் பார்க்கின்றன.

வன்மத்திற்குத் தீர்வு, இன்னும் அதிகமாகக் காட்டுகிற வன்மமாக இருக்கமுடியாது. நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது. படகில் ஒரு ஓட்டையின் மூலம் உள்ளே நுழைந்த தண்ணீரை இன்னொரு துளையின் மூலம் வெளியே அனுப்பிவிட முடியாது....

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# உன்னை நான் சந்தித்தால்.....3



உறவை வளர்க்கின்ற காரணிகள் நிறைய உண்டு. அவற்றில் முக்கியமானது மகிழ்ச்சி. மகிழ்ச்சி உள்ளுக்குள் புதைந்து கிடக்கும் புதையல்ல. அது முற்றத்தில் சிதறிக் கிடக்கும் முத்துக்கள் போன்றது. முகத்தில் அரும்பும் புன்முறுவல், முகமலர்ச்சி, உற்சாகம், புன்னகை போன்றவை அதன் வெளி அடையாளங்கள்.

*சிறு குழந்தை தனது முத்துப் பல் காட்டி முகமலரும் போது எத்துன்பமும் விட்டுப் போகிறது*

பொன் நகைகளைவிட மனிதனுக்கு அதிகம் அழகு சேர்ப்பது, மனித வாழ்விற்கு அதிகம் மெருகூட்டுவது மகிழச்சி. எனவேதான் மகிழச்சியின் வெளிப்பாடாகிய புன்முறுவலை, முகமலர்ச்சியைப் புன்னகை என்கிறோம். இறைவன் நமது முகத்திற்குக் கொடுக்கின்ற நகை புன்னகை.

தானும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்ச்சிப்படுத்தத் தெரியாத மனிதன் புன்னகையைத் தொலைத்து விட்ட மனிதனாவான்.

மகிழ்ச்சி ஒரு நீர் சுழற்சி போன்றது. சிறுவன் ஒருவன் விளையாட்டாக நீர் நிறைந்த குளத்தின் நடுவில் ஒரு கல்லை எறிய, அந்தக் கல் நீரில் எங்கு விழுந்ததோ அவ்விடத்தில் ஒரு சிறிய வட்டம் உருவாகிறது. அச்சிறிய வட்டம் சுழன்று பெரிய வட்டமாகிய நொடிப்பொழுதில் குளம் முழுவதும் படர்ந்து விடுகிறது. நம்மில் உருவாகும் மகிழ்ச்சியும் இப்படித்தான்.

ஒருவருடைய மகிழச்சி அவரிடமே இருந்தால் அது மகிழ்ச்சியாகவே இருக்க முடியாது. அது சுழற்சியை ஏற்படுத்தியாக வேண்டும். தொற்று நோய் போல மற்றவர்களுக்கு ஒட்டினால்தான் அதற்குப் பெயர் மகிழச்சி.

விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் விளைந்த கற்பூரவள்ளி வாழைக்குலை ஒன்றை அதிகாலையில் பறித்து எடுத்து வந்து தன் ஊரில் உள்ள மடத்தின் வரவேற்பறையில் பணியாற்றிய, தனக்கு மிகவும் பிடித்த அருட்சகோதரரிடம் கொடுத்தார். அவருக்கோ எல்லையற்ற மகிழச்சி. அவரால் அந்த மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. உடனே வாழைக்குலையை எடுத்துக் கொண்டுபோய் விபத்தில் அடிப்பட்டுக் கிடந்த சக சகோதரரை மகிழ்ச்சிப்படுத்தும் எண்ணத்துடன் அவரிடம் கொடுத்தார். படுத்த படுக்கையாய்க் கிடந்த சகோதரருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவர் துள்ளிக் குதிக்காத குறைதான். சபைத்தலைவர் மதியம் உணவருந்திவிட்டுப் படுத்திருந்த சகோதரரைப் பார்க்க வந்தபோது வாழைக்குலை தலைமைச் சகோதரரின் கைக்குமாறியது. தலைவருக்கோ மட்டற்ற மகிழ்ச்சி. தனது மடத்துச் சகோதரர் தன்மீது இந்த அளவு பாசம் வைத்திருக்கிறாரே என்று பெருமைப்பட்டார். தனக்கு வந்ததைப் பத்திரமாக வைத்திருந்து என்னிடம் கொடுக்கிறாரே என்று பெருமைப்பட்டார். பிற்பகல் நான்கு மணிக்குக் கற்பூரவள்ளி வாழைக்குலை மீண்டும் வரவேற்பு அறைச் சகோதரிடமே வந்து சேர்ந்தது. முகத்தில் மகிழ்ச்சி பொங்க வந்த தலைமைச் சகோதரர் வரவேற்பறைச் சகோதரரிடம் வாழைக்குலையைக் கொடுத்து மடத்திற்கு வருபவர்கள் எல்லோருக்கும் உண்ணக் கொடுக்கும்படி பணித்தார். காலையில் மடத்து வரவேற்பறையிலிருந்து தனது பயணத்தை தொடங்கிய கற்பூரவள்ளி வாழைக்குலை மாலை மீண்டும் வரவேற்பறைக்கே வந்து சேர்ந்தது. நாம் வெளியில் பரவவிடும் மகிழ்ச்சி கதிர்களும், மகிழச்சி அலைகளும் இப்படித்தான்.

மகிழ்ச்சியோடு வாழும் மனிதர்களால் வாழ்க்கையையே வித்தியாசமாகப் பார்க்க முடியும். குடத்தில் உள்ள தண்ணீரைப் பார்க்கும் துயரமான மனிதன் அதில் பாதிக்கு மேல் தண்ணீர் இல்லை. வெறுமையாக உள்ளது என்று சிந்திக்கும்போது, மகிழ்ச்சியான மனிதன் குடத்தில் தண்ணீர் பாதி நிறைந்துள்ளது எனச் சிந்திக்கின்றான். மகிழ்ச்சியுடன் வாழ கற்றுக் கொண்ட மனிதனுக்கு முன்னால் சோகங்களும், துயரங்களும்,வேதனைகளும், துன்பங்களும், துக்கங்களும் கை பொத்தி, வாய்பொத்தி பேசா மடந்தையாக நிற்கும். மகிழ்தல் அல்லது மகிழ்ச்சி என்பது இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களுக்கும் பொதுவானாலும், மகிழ்ச்சியை மனிதனால் மட்டுமே நேரடியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்த முடியும். மிருகங்கள், தாவரங்கள், இயற்கை போன்றவற்றிற்கும் மகிழ்சசி ஒரு பொதுவான உணர்வு என்று கூறினாலும் மனிதனைப் போல் அவை வெளிப்படையாக மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியாது. ஆனால் மனிதனின் புன்னகைக்குள் ஆயிரம் அர்த்தங்கள் அடங்கிக் கிடக்கும. மனித வாழ்க்கையின் நிறைவுக்கான சூத்திரமே மகிழ்ச்சிதான். மனிதனால் மட்டுமே வாய்விட்டுச் சிரித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியும். ஆயிரக்கணக்கான பாவனைகளில் மகிழ்ச்சியை முகத்தில் அவனால் அரும்பவிட முடியும். இந்த மகிழ்ச்சியை விலைகொடுத்து மட்டும் வாங்க இயலாது. வசதிகள் கூடக்கூட, வாய்ப்புகள் பெருகப் பெருக மகிழ்ச்சிக்கு இறங்கு முகம்தான். வண்ணத்துப் பூச்சியாய்ச் சுற்றி சுழலும் குழந்தைகளிடம் இருக்கும் மகிழ்ச்சி வயதிலும் அனுபவத்திலும் முத்தவர்களிடம் இல்லை. அன்றாடம் காய்ச்சியாய் அலையும் பஞ்சப்பரதேசியின் உள்ளத்தில் நிறைந்துள்ள மகிழ்ச்சி மாடமாளிகையில் வாழும் செல்வச் சீமானிடம் இல்லை. நாம் அழைக்காமலே நம்மை நலம் விசாரிக்க மகிழ்ச்சி எல்லோர் வீட்டிலும் படியேறத்தான் செய்கிறது. ஆனால் ஏழை தன் குடிசையின் வாசலில் வந்து நின்று மகிழ்ச்சியை வரவேற்றுத் தன் வீட்டுக்குள் அழைத்துப் போகிறபோது மாடி வீட்டு மேதாவியோ வீட்டுக்குள் வந்த மகிழ்ச்சயை வீதிவரை வந்து விரட்டும் அவலநிலைதான் அன்றும் இன்றும், ஏழை வீட்டுக்கு குடிசைக்குக் கதவு எங்கே இருக்கிறது இறக்கை கூட்டி வரும் மகிழ்ச்சியைத் தடுப்பதற்கு, மாடி வீட்டுக் கதவிலே இரட்டைத் தாள்பாள் இருக்கும்போது எங்கே நுழையும் மகிழ்ச்சி.

இயேசுவின் பிறப்பு அறிவிப்பு மாடமாளிகையில், கூட கோபுரத்தில் வாழ்ந்த பெரிய ஏரோதுக்கு அறிவிக்கப்பட்டது. மூன்று கீழ் திசை ஞானிகள் இம்மகிழ்ச்சிச் செய்தி தாங்கி பெரிய ஏரோதின் படியேறினர். ஆனால் இச்செய்தி பெரிய ஏரோதுக்குக் கலக்கம் ஏற்படுத்தியது. அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கியது. (புனித மத்தேயு 2:20) இயேசு பிறந்த மகிழ்ச்சிச் செய்தியைப் பெரிய ஏரோதுக்கு அறிவிக்க வந்த வானதூதர்-கள்தான் மூன்று கீழ்த்திசை ஞானிகள், பெரிய ஏரோதோ உள்ளே பெத்லகேம் சென்று இயேசுவைக் காண விரும்பவில்லை. மகிழ்ச்சி என்னும் இயேசு குழந்தையை அழிப்பதிலே அவன் கருத்தாயிருந்தான். இதன் மூலம் அவனறியாமலே அவனது மகிழ்ச்சியை அவனது நாட்டின் மகிழ்ச்சியைத் தான் அழிப்பதை பெரிய ஏரோது அறியாமல் இருந்தான்.

இந்த மகிழ்ச்சிச் செய்தி வானதூதர்கள் வழியாக வயல்வெளியில் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடையைக் காவல் காத்துக்கொண்டிருந்த எளிய இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. வானதூதர்கள் இடையர்களை நோக்கி 'இதோ, எல்லா மக்களுக்கும் பெரும்மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்' (புனித லூக் 2:10) என்று கூறிய உடன் இடையர்கள் இயேசு குழுந்தையைக் காண ஒன்று சேர்ந்து பெத்லகேம் நோக்கிப் புறப்பட்டனர். மகிழ்ச்சி என்னும் இயேசு குழந்தையையும் அவர்களால் காண முடிந்தது. (புனித லூக் 2:16)

யூத அரசரது விண்மீனைக் கண்டோம் என்று ஞானிகள் பெரிய ஏரோதிடம் கூறியபோது பெரிய ஏரோதால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எல்லாத் தலைமைக் குருக்களையும் மறைநூல் அறிஞர்களையும் கூட்டி அதன் விளக்கத்தையும், மெசியா எங்கு பிறப்பார் என்ற தெளிவையும் பெறவேண்டியிருந்தது. (புனித மத் 2:2,4-6) ஆனால் சாமானியர்களான இடையர்களோ தாவீதின் ஊரிலே மெசியா என்னும் மீட்பர் பிறந்துள்ளார் என்ற உடனே அது பெத்லேகம் என்று அடையாளம் கண்டு கொண்டனர். (புனித லூக் 2:15) மகிழ்ச்சியை ஏழை இடையர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தபோது அரசன் பெரிய ஏரோதால் மகிழ்ச்சியை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. (புனித மத்2:4)

இயேசு குழந்தை என்னும் மகிழ்ச்சியைக் கண்ட இடையர்கள் தங்கள் அனுபவத்தை எண்ணிக் கடவுளுக்கு நன்றி சொல்லிப் போற்றிப் புகழ்ந்து கொண்டே வீடு திரும்பினர். (புனித. லூக் 2:20) என்றும் மகிழுங்கள், மீண்டு கூறுகிறேன் மகிழுங்கள்' என்று பிலிப்பியர்களுக்கு எழுதுகிறார் பவுலடியார் (பிலி 4:4) ''என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே'' என்பது இயேசுவின் கூற்று. (புனிதயோவா 15:11) உறவை வளர்க்கின்ற ஊட்டச்சத்து மகிழ்ச்சி, மகிழ்ச்சியை வேரறுக்க விரும்புவர்களை எருசலேமுக்கும் பெத்லமேற்குமான உறவுப் பாலத்தைத் தகர்க்க விரும்பும் ஏரோதுகள், மகிழ்ச்சியின் அலைகளை எங்கும் பரவ விட முயல்பவர்கள் வயல்வெளிக்கும் பெத்லேகமுக்கும் உறவுப் பாலமிடும் இடையர்கள்.

## புனித திருமுழுக்கு யோவானின் தலை வெட்டப்பட்ட நிகழ்வு

திருச்சபையில் அன்னை மரியாவுக்கு அடுத்தபடியாக இரு திருவிழாக்களைக் கொண்டாடும் தகுதி பெற்றவராகக் கருதப்படுபவர் புனித திருமுழுக்கு யோவான்.

முதலாவது திருவிழா ஜுன் 24ம் திகதி பிறந்த நாளும்
இரண்டாவது ஆகஸ்ட் 29ம் திகதி
தலை வெட்டப்பட்ட நாள்

அபியா குலக்குரு செக்கரியாவுக்கும், ஆரோன் குல எலிசபெத்துக்கும் அவர்களது முதிர் வயதில் (புனித லூ1:5-25) திருமுழுக்கு யோவான் பிறந்தார். இவர் பிறக்கும் முன்பே முன்னறிவிக்கப்பட்டவராகவும், இயேசுவின் தாயால் வாழ்த்தப்பட்டவராகவும் இருந்தது இவரது எதிர்காலச் சிறப்பை உணர்த்தும் விதத்தில் அமைந்தது.

இவரது வாழ்வைவிட பணியே எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தது. இவர் தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்பித்திருந்தார். அவர்கள் வேண்டல் செய்ததைப் பார்த்த இயேசுவின் சீடர்கள் இயேசுவிடம்

யோவான் தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்றுக் கொடுத்ததுபோல எங்களுக்கும் கற்றுக்கொடும்!


(புனித லூக் 11:1-2) என்றனர்

இதுவே உலகப் புகழ்பெற்ற அப்பா அனுபவத்தை எல்லாருக்கும் அள்ளிக்கொடுக்கக் கூடிய அற்புத இறைவேண்டலான இயேசு கற்பித்த மன்றாட்டு' உருவாகக் காரணமாக அமைந்தது.

இயேசுவின் பணி வாழ்வின் தொடக்கமாகக் கருதப்படும் இயேசுவின் திருமுழுக்கின் செயல் வீரராகத் திருமுழுக்கு யோவான் கருதப்படுகிறார். விளைவு இன்னதெனத் தெரிந்தும் இறைவனின் குரலாக நின்று மக்களுக்கு நீதியை எடுத்துரைத்தும், அநீதியைக் கண்டித்தும் கடமை ஆற்றியவர்கள்தான் இறைவாக்கினர்கள். அவர்களில் ஒருவராகத் திருமுழுக்கு யோவானும் கருதப்பட்டார். இவர் பழைய ஏற்பாட்டு நிறைவாகவும், புதிய ஏற்பாட்டின் தொடக்கமாகவும் இணைக்கும் இணையற்ற இறைவாக்கினர்.

வாக்குக்கொடுத்து வகையாக மாட்டிக்கொண்ட நீதித்தலைவர் இப்தா தன் சொந்த மகளையே இழக்க நேரிட்டது. அதுபோல திருமுழுக்கு யோவானின் கருத்துக்கள் கசந்த போதும் அவரைக் கொல்ல நினைக்காத ஏரோது, தான் சிறுமி சலோமிக்குக் கொடுத்த வாக்கினால் திருமுழுக்கு யோவானின் தலை வெட்டப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டான். அதுவும் ஏரோதுவைத் திருத்த அவனது சகோதரன் மனைவி ஏரோதியாளின் திருவிளையாடல்தான்.

திருமுழுக்கு யோவான் இன்று நமக்குத் தரும் சிந்தனைகள்



1. இயேசுவின் செல்வாக்குப் பெருக வேண்டும். எனது செல்வாக்குக் குறைய வேண்டும்.
2. ஒவ்வொருவரும் மனந்திருந்தியவர்கள் என்பதைச் செயலில் காட்ட வேண்டும்.
3. கடவுளரசு நெருங்கி வந்து விட்டது என பறைசாற்ற வேண்டும்.




**“விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் எல்லாம் உழைத்துக் கொண்டே இருப்போம்”**



# உழைத்தால் வாழலாம்

நாளைய இலங்கையை உருவாக்க வேண்டிய இளைய தலைமுறை இன்று எப்படியிருக்கின்றது? ஒருபக்கம் வேகமாக முன்னேறிக்கொண்டே இருக்கிறது. மறுபக்கம் இளைத்த தலைமுறையாக ஆகிக்கொண்டிருக்கிறது. சிறுவயதில், “நீ என்னவாக ஆக விரும்புகிறாய்?” என்று கேட்டால், “நான் டாக்டர் ஆவேன்”, “நான் என்ன ஆவேன்னு எனக்கே தெரியவில்லை” என்கிறார்கள். வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லாமல், போராடக் கூடிய மனவலிமை இல்லாமல் தன்னம்பிக்கை இல்லாமல், மனம் போன போக்கில் சிந்தையைச் செலுத்தித் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்கள். “மாணவன் கேலி செய்தான் - அதனால் மாணவி தற்கொலை”, “தந்தை கண்டித்தார் - அதனால் மகன் தற்கொலை”, “காதலைப் பெற்றோர் ஏற்கவில்லை” - அதனால் காதலன் காதலி இருவரும் தற்கொலை. “தேர்வில் தோல்வி என்று மாணவன் குறும்பாகச் சொல்ல மாணவி தற்கொலை” - இப்படி தினந்தோறும் வரும் பத்திரிகைச் செய்திகள் ஒரு புறம். மற்றொருபுறம் ஆடம்பரமான வாழ்க்கை வாழவேண்டும். குறுக்கு வழியில் பணம் சேர்க்க வேண்டும். விரைவில் பணக்காரர் ஆகவேண்டும் என்பதற்காகத் தவறான வழியில் ஒரு சிலர் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பன போன்ற செய்திகள். இப்படி இளைய தலைமுறை திட்டமிட்ட பாதையை விட்டுவிட்டுத் திசை தவறிய பாதையில் சென்றுகொண்டிருக்கிறது.

இளைய தலைமுறையினர் ஒளி படைத்த கண்ணினராய், உறுதி கொண்ட நெஞ்சினராய், களி படைத்த மொழியினராய் வரவேண்டும் என்று கனவு கண்டவர் பாரதியார், ஒருமுறை பாரதியாரும், வ.ரா.வும் பேசிக்கொண்டே தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். வழியில் ஒரு திண்ணையில், “இளமையில் கல்” என்று நீதிநூல் பாடத்தைப் படித்துக் கொண்டிருந்தான் ஒரு சிறுவன். உடனே பாரதியார். “முதுமையில் மண்” என்றாராம். அதற்கு அவர் சொன்ன விளக்கம். “இளமையிலே கல்லாயிருப்பவன் முதுமையில் கவனிப்பாரற்ற மண்ணாவது நிச்சயம்... இரண்டாயிரம் ஆண்டுகளாக, நமது மூதாதைகள் இளமையில் கல்லாகவும் முதுமையில் மண்ணாகவும் இருந்திருந்து போய்விட்டார்கள். இளமையிலே தகதக-வென்று மின்னும் கோடி சூரியப் பிரகாசத்துடன் நமது குழந்தைகள் ஜொலிக்க விளங்க வேண்டும்” என விரும்பினார் பாரதியார். வாழ்க்கையில் வெற்றி தோல்வி ஏற்படுவது இயல்பு. எத்தனையோ தடைகள் வரலாம். தடைகளைப் படைகளாக்கிக் கொண்டால், தடைகள் பொடிப்பொடியாகிவிடும். வாழ்வில் வெற்றி-பெற அறிஞர்கள் பலரும் பல தடைகளைக் கடந்து வந்தவர்தாம். கார்லைல் என்னும் எழுத்தாளர், இரவும் பகலும் பாடுபட்டு எழுதிய “பிரெஞ்சு நாட்டுப் புரட்சியின் சரித்திரம்” என்ற புத்தகத்தின் கையெழுத்துப் படியைத் தம்முடைய நண்பருக்குப் படித்துப் பார்க்கக் கொடுத்தார். அவருடைய வேலைக்காரி, அதை ஏதோ குப்பைத்தாள் என்று நினைத்து நெருப்பிலே போட்டு எரித்துவிட்டாள். கார்லைலின் பல ஆண்டு உழைப்பு சில விநாடிகளிலேயே சாம்பலாகிவிட்டது. கார்லைல் நம்பிக்கையைச் சிறிதுகூட இழக்காமல், மீண்டும் பல மடங்குகள் துன்பப்பட்டு உழைக்கத் தொடங்கினார். எண்ணற்ற புத்தகங்கள் மீண்டும் படித்துக் குறிப்புகள் எடுத்துக்கொண்டார். நூற்றுக்கணக்கான ஆராய்ச்சிக் குறிப்புக்களை மீண்டும் படித்தார். மீண்டும் அதே புத்தகத்தை இன்னும் குறைந்த நேரத்தில் முன்பு எழுதியதைவிடச் சிறப்பாக எழுதி முடித்தார்.

தாமஸ் ஆல்வா எடிசன் எத்தனையோ தோல்வி-களுக்குப் பிறகு தான் மின்விளக்கைக் கண்டுபிடித்தார். “உலகம் தட்டை அன்று, உருண்மை வடிவமானது” என்று சொன்ன கலிலியோவுக்கு நேர்ந்த இடர்பாடுகள் ஏராளம், ஏராளம். வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே பல தடைகளை, தோல்விகளை எதிர்த்துப் போராடி வென்றவர்கள் தாம். இன்று பெரும்பாலான மக்கள் மிக எளிதில் தன்னம்பிக்கையை இழந்து-விடுகிறார்கள். வாழ்க்கையில் எதிர்படும் சிறு சிறு சோதனைகளும் சிக்கல்களும் கூட அவர்களுக்குப் பெருந்துயரத்தையும் பேரச்சத்தையும் தந்துவிடுகின்றன. அத்தகைய மக்களுக்குச் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று பொன்னான பாடமாக அமையும். ஒருமுறை விவேகானந்தர் வாரணா-சிக்குச் சென்றிருந்தார். ஒரு பக்கம் பெரியகுளம், மறுபக்கம் நீண்டு நெடிது உயர்ந்த சுவர். அந்தத் தெரு வழியாக நடந்து போய்க்கொண்டிருந்தார். அங்கிருந்த திடலில் ஏராளமான குரங்குகள் இருந்தன. தடித்த முரட்டு விலங்குகள் அவை. தாம் வாழும் தெரு வழியாக விவேகானந்தரைச் செல்லவிடாமல் மறித்தன. கீச்கீச்செனக் கூச்சலிட்டும். வம்பு செய்தன. கடிக்கவும் தொடங்கின. விவேகானந்தர் அவற்றினின்றும் தப்பிக்க விரைந்து ஓடத் தொடங்கினார். வேகமாக ஓட ஓட, அக்குரங்குகளும் மிக விரைவாக ஓடி வந்து கடிக்கத் தொடங்கின. அவற்றிடமிருந்து தப்ப முடியாது என்ற அந்தக் கடுமையாக சூழ்நிலையில் முன்பின் தெரியாத வழிப்போக்கர் ஒருவர் உரத்த குரலில் “முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு” என்று கத்தினாராம். விவேகானந்தர் உடனே திரும்பி, தம்மை விரட்டிக் கடிக்க வந்த அந்தக் குரங்குகளை நேருக்கு நேர் துணிச்சலோடு பார்த்தாராம். உடனே அவை பின்வாங்கி, ஓடத் தொடங்கினவாம். அந்நிகழ்ச்சி தம் வாழ்க்கையில் ஒரு பாடமாக அமைந்தது என்கிறார் விவேகானந்தர்.

“இடுக்கண் வருங்கால் அஞ்சாமல் எதிர்கொண்டு, துணிச்சலுடன் அதனை எதிர்க்க வேண்டும்” என்பதே அப்பாடம். குரங்குகளைப் போன்று வாழ்க்கையில் நம்மை எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளையும் பிரச்சினைகளையும் கண்டு அஞ்சி ஓடாமல் எதிர்த்து நின்றோமாயின், நம்மைவிட்டு அவை விலகி ஓடிவிடும். நம்மைப் பிடித்திருக்கும் அச்சம், துன்பம் அறியாமையை எதிர்த்துப் போராடவேண்டும் என்கிறார் விவேகானந்தர். இதைத்தான் வள்ளுவரும்.

**“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்மைப்பு இடும்பை படாஅ தவர்”** என்று அன்றே கூறிச் சென்றார்.

**“வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல்தோறும்**
**வேதனை இருக்கும் வந்த துன்பம் எது என்றாலும்**
**வாடி நின்றால் ஓடுவதில்லை – எதையும்**
**தாங்கும் இதயம் இருந்தால்**
**இறுதி வரைக்கும் அமைதி கிடைக்கும்”**


என்றார் கவிஞர் கண்ணதாசனும்.

**“வாழும் வரை போராடு**
**வழி உண்டு என்றே நீ பாடு”**

தொடரும்

# குருக்கள் துறவியர்களுக்கான ஒன்றுகூடல் - 2019

## *“Baptized and sent”*






**அருட்தந்தை பசில் ரொகான் பர்னாந்து**
**பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர்**

இவ்வருடம் குருக்கள் துறவியர்களுக்கான இணைப்பாளர் கருத்தரங்கு “Baptised and sent” எனும் கருப்பொருளை அடிப்படையாகக்கொண்டு இடம் பெற்றது. இத்தலைப்பானது EMM 2019 மறைபரப்பு மாதத்தை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்க-ளினால் பிரகடனப்படுத்தப்பட்டது. பாப்பிறை மறைபரப்பு சபைகளினால் உலகம் பூராகவும் செயற்படுத்த பல விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அத்தோடு உலக மறைபரப்பு ஞாயிறு 2019ம் ஆண்டை சிறப்பிக்கும் முகமாக 2017ம் ஆண்டில் இருந்து பல வகையான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். எனவே இதனை அடிப்படையாக கொண்டு 2019 ஆடி மாதம் 29, 30, 31 ஆகிய தினங்களில் “Baptised and sent” எனும் கருப்பொருளுக்கு அமைய கண்டி அம்பிட்டிய இலங்கை மாதா தேசிய குருமடத்தில் வருடாந்த இணைப்பாளர் ஒன்று கூடல் 12 மறைமாவட்டங்களிலும் உள்ள 135 குருக்கள், துறவியர்களின் பங்களிப்புடன் இடம் பெற்றது.

இவ் ஒன்றுகூடலில் ஆரம்ப நிகழ்வின் போது பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர் தனது உரையில் கூறியதாவது “ஐந்து வருட காலத்திற்குள் இலங்கையின் மறைபரப்பு செயற்பாடுகள் தொடர்பாக பன்னிரண்டு மறைமாவட்டங்களிலும் உள்ள ஐந்நூறு குருக்கள், துறவியர்களை பயிற்சிவிப்பதே எமது நோக்கம் என்றும், 2017ல் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடு 2019 வரை வெற்றிகரமாக நடைபெற்றதுடன் “Baptised and sent” எனும் கருப்பொருளுக்கு அமைய இவ்வருட நிகழ்வை நடாத்த உதவி புரிந்த இறைவனுக்கு நன்றியும் கூறினார்.

இவ் ஒன்று கூடலில் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த குருணாகல் மறைமாவட்ட ஆயர் ஹெரல் அன்டனி பெரேரா அண்டகை இவ் ஒன்றுகூடலை தன் உரையினால் மெருகூட்டி கூறியதாவது “இவ் மறைபரப்பு செயற்பாடானது மிகவும் முக்கியமானதும் பெறுமதி மிக்க ஒன்றுமாகும்”. அதுமட்டுமன்றி இவ் மறைபரப்பு செயற்பாடானது தொடர்ச்சியாக தொடர வேண்டும் என்றும், இது எமது தேசத்தின் திருச்சபைக்கும் ஒரு சிறந்த ஒன்றாக அமைகின்றது, என்பதோடு “நாமே மறையும் மறைபரப்பாளருமாவோம்” எனும் முக்கிய கருத்தையும் முன் வைத்தார்.

அடுத்து வளவாளராக வருகை தந்திருந்த சிலாப மறைமாவட்ட ஆயர் வலன் மென்டிஸ் அடிகளார் தன் உரையின் போது “Baptised and sent” எனும் தலைப்பினை அடிப்படையாக கொண்டு EMM 2019 மறைபரப்பு மாதத்தினைப் பற்றிய விளக்கத்தினை கொடுத்து, எமது நாடு மறைபரப்பு பணியில் ஈடுபட்டிரு-ப்பதினால் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது. எனவே “Baptised and sent” எனும் இந்த வார்த்தையானது எமக்கு ஒரு தெளிவை கொண்டு வர வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் இந்த பயிற்சிப் பாசறையானது பல கருத்துக்களை அடிப்படையாக கொண்டு நடைபெற்றது. இதில், “நீங்கள் இறைவனின் மறைபொருளின் பரிசு” எனும் தலைப்பில் விரிவுரையாளர் அன்ரன் மீமன அவர்கள் உரையினை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து “நீங்கள் எனக்கும் என் மக்களுக்கும் பெறும-தியானவர்கள்” எனும் தலைப்பில் அருட்தந்தை பிரசாத் ஹர்ஷன அவர்கள் தன் உரையினை நிகழ்த்தினார்.

“Baptised and sent” எனும் தலைப்பின் கீழ் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தனது விசேட உரையினை நிகழ்த்தினார். அத்தோடு, “பாப்பிறை மறைபரப்பு சபைகளின் திருப்பாலர் சபையின் முக்கியத்துவம்” எனும் தலைப்பை அடிப்படையாக கொண்டு அருட்தந்தை நீரியோ ஆபிரகாம் அவர்கள் தனது உரையை தொகுத்துக் கூறினார்.

அதன் பின் கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகை “அழைக்கப்பட்டு அனுப்பப்படுகி-ன்றீர்கள்” எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு சொற்பொழிவினை வழங்கினார்.

இப்பயிற்சிப் பாசறையில் கொடுக்கப்பட்ட அனைத்து கருத்துக்களும் பங்குபற்றிய அனைவருக்கும் ஒரு சிறந்த பயிற்சியை கொடுப்பதற்காகவே அமைந்திரு-ந்தது. அத்தோடு, பங்குபற்றிய அனைவரிடமிருந்தும் திரட்டிய தகவல்களின் படி அவர்கள் கூறிய கருத்தானது “இக்கருத்தரங்கினை தொடர்ந்து மேற்கொள்ளுமாறும், இதன் மூலம் உள்ளூர் திருச்சபையின் மறைபரப்பு சேவையானது எமது புதிய நற்செய்தி அறிவிப்பு பணியினை மேற்கொள்ள மேலும் பல வழிகளில் உதவுகின்றன எனவும் கூறியுள்ளனர்.

2019ல் பாப்பிறை மறைபரப்பு சபைகளின் குருக்கள், துறவியர்களின் இணைப்பாளர் கருத்தரங்-கானது மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றதையிட்டு, பங்குபற்றியவர்களுக்கும் அதனை ஏற்பாடு செய்தவர்-களுக்கும் பெரும் மகிழ்வை கொடுத்தது. அத்தோடு, நற்செய்தி அறிவிப்பிற்கு ஆதாரமாக அச்சிடப்பட்ட பல புத்தகங்களும், 2019 மறைபரப்பு மாதத்தை முன்னிட்டு அச்சிட்ட..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# குருத்துவ திருநிலைப்படுத்தலின் வெள்ளி விழா காணும் அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அ.ம.தி அடிகளார்



**“ஆண்டவர் எனது ஆயர் எனக்கு வேண்டியது ஒன்றுமில்லை”**

புத்தளம் கட்டைக்காடு பிரதேசத்தை சேர்ந்த காலஞ்சென்ற மில்ட்டன் முத்துத்தம்பி, கார்மல் விக்டோரியா தம்பதியரின் இரண்டாவது மகனாக பிறந்த அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அடிகளார், தனது பாடசாலை கல்வியை கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்திலும் உயர்தரத்தை புத்தளம் சாஹிரா கல்லூரியிலும் கற்றார். கல்வியில் சிறந்து விளங்கிய அடிகளார் தனது இளமானிப் பட்டத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பெற்றார். இதனைத் தொடர்ந்து இறைபணிக்கு தனது வாழ்வை அர்ப்பணிக்கும் ஆவலுடன் இறைவனின் அழைப்பை உணர்ந்து கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் குருமடத்தில் இணைந்தார். தொடர்ந்து கொழும்புத்துறை பிரான்சிஸ் குருமடத்திலும், கண்டி தேசிய குருமடத்திலும் தனது குருத்துவ கல்வியை பூர்த்தி செய்து 1994 ஆகஸ்ட் 27ம் நாள் மருதானை புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் மறைந்த முன்னாள் சிலாப மறைமாவட்ட ஆயர் பிரேங் மார்கஸ் ஆண்டகையினால் அமலமரித்தியாகிகள் சபை குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

அருட்பணி. நியூமன் அடிகளாரின் முதலாவது பணித்தளமாக கல்கமுவ பங்கு விளங்குகின்றது. இலங்கையின் அப்போஸ்தலரான புனித ஜோசப் வாஸ் அடிகளாருக்கு சிறிய ஆலயம் அமைக்கும் பாக்கியம் அங்கு கைகூடியது. அதனைத் தொடர்ந்து பொல்காவல புனித லூர்து அன்னை பங்கின் உதவி பங்குத்தந்தையாகவும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நோயாளர்களின் பொறுப்பு குருவாகவும் சேவையாற்றி புதுக்கடை பங்கின் பங்குதந்தையாக பொறுப்பேற்றார். இப்பங்கின் மூன்று ஆலயங்களை மெருகூட்டி புணரமைத்ததுடன் பங்கு மண்டபம் ஒன்றையும் கட்டினார். அந்த காலப்பகுதியில் நிலவிய நாட்டின் நிலைமை காரணமாக மருதமடு அன்னையின் ஆலயம் சென்று வழிபடும் பாக்கியம் கொழும்பு வாழ் மக்களுக்கு கிடைக்காத நிலையை உணர்ந்து மருதமடு அன்னையின் திருவிழாவை ஆரம்பித்து அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்க வழிகோலினார்.

இதனைத் தொடர்ந்து புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை பங்கின் பங்குத்தந்தையாக பொறுப்பேற்று இப்பங்கின் முன்னேற்றத்தில் அளப்பரிய பங்காற்றினார். பங்கின் சஞ்சிகையான “ஒளியை நோக்கி” சஞ்சிகை ஆரம்பித்தமை, பங்கின் பேண்ட் வாத்திய குழுவை ஆரம்பித்தமை, பங்கு மண்டப கட்டுமாணப் பணிக்காக ஆலய அயல் காணியை கொள்வனவு செய்தமை, கவனிப்பாரற்று கைவிடப்பட்டிருந்த மேட்டுத்தெருவில் அமைந்திருந்த ஆலயக் காணியில் றோசா மிஸ்டிக்கா மண்டபம், அனைத்திற்கும் மேலாக பங்கு மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அழகிய, இடவசதியுள்ள புதிய ஆலயத்தை அமைத்தமை, பங்கின் குருமனை கட்டியமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இங்கிருந்து மீண்டும் கல்கமுவ பங்கின் பங்குத்தந்தையாக மாற்றலாகிச் சென்று தனது அயராத உழைப்பினாலும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் புனித ஜோசப் வாஸ் அடிகளாரின் திருக்கரங்களால் கருங்காலி மரத்தினால் செதுக்கப்பட்ட திருச்சிலுவையையும், அடிகளாரின் திருச்சுரூபத்தையும் அழகுற ஸ்தாபித்தார். அங்கும் மகா கல்கமுவ கிராமத்தில் அழகியதொரு புனித அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயத்தை அமைத்ததுடன் இரண்டு மாடி பங்குமண்டபமும் அமைத்தார். ஊர் மக்களுக்கு குழாய் குடிநீர் பெற்றுக்கொடுத்தார்.

இறைபணியுடன் ஒருசேர கல்விப் பணியிலும் அடிகளார் அரும்பணியாற்றினார். தனது முதுமானிப் பட்டத்தை இந்தியா மெட்ராஸ் பல்கலைக்கழகத்திலும், பட்டப் பின் கல்வி டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், மனிதவள முகாமைத்துவ டிப்ளோமாவை பொரள்ளை அக்குவைனாஸ் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். அத்தோடு கொழும்பு 13 புனித அந்தோனியார் கல்லூரியிலும், கல்கமுவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் ஆசிரிய பணிபுரிந்த அடிகளார் தற்போது கொழும்பு முகத்துவாரம் டிலாசால் கல்லூரியின் அதிபராக கடமையாற்றுகின்றார்.

நல்லாயனாம் ஆண்டவரின் மேய்ப்புப் பணியில் தம்மை ஈடுபடுத்தி, இறைவன் வழங்கிய பலவித திறமைகளை வளர்த்துக்கொண்டு மட்டுமன்றி அதை இறைமக்களினதும் குறிப்பாக பிள்ளைகளது நல்வாழ்விற்காகவும் சிறந்த எதிர்காலத்திற்காகவும் அர்ப்பணித்து, அயராது உழைத்து இன்று தமது குருத்துவ வாழ்வின் வெள்ளி விழா காணும் அருட்பணி நியூமன் முத்துத்தம்பி அடிகளார் எமது வியாகுல மாதா பங்கில் 10 ஆண்டுகள் தம் பணியை சிறப்புடன் ஆற்றிய அருட்தந்தையை வாழ்த்துவதோடு இறையாசீரும் அன்னை மரியாளின் பரிந்துரையும் நிறைவாக கிடைக்க பிரார்த்திக்கின்றோம். அவரது வெள்ளிவிழா புனித வியாகுல அன்னை ஆலயத்தில் புரட்டாதி மாதம் 1ம் திகதி காலை 7.00 மணி திருப்பலியில் கொண்டாடப்படவுள்ளது.

அமலச்சந்திரா ஜெறோம்.

# குருத்துவ திருநிலைப்படுத்தலின் வெள்ளி விழா காணும் அருட்பணி. மைக்கல் சந்தானம் அடிகளாரின் வாழ்வில் சில துளிகள்...



**தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே நான் உன்னை தேர்ந்துகொண்டேன். நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்” (எரே 1:1–19)** என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப அழைப்பின் குரல் கேட்டு பல சவால்களுக்கு முகம் கொடுத்து இறைவனோடு ஒன்றித்து கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இறைமக்களுக்கு ஆற்றிய பணிகளை மகிழ்ச்சியோடு நினைவுகூறுகின்றோம்.

எழில்கொஞ்சும் மலையகத்திலே கண்டி மாநகரில் புசல்லாவை என்னும் இடத்தில் திரு அந்தோனிமுத்து, திருமதி. மதனமுத்து அருள் ஆகியோருக்கு 1967ம் ஆண்டு மாசி மாதம் 22ந் திகதி மகனாக பிறந்தார். இவருக்கு நான்கு சகோதரர்களும், நான்கு சகோதரிகளும் உள்ளனர்.

ஆரம்ப கல்வியை கண்டி டெல்டா தமிழ் வித்தியாலயத்திலும், பின்பு C.M.S. கல்லூரியிலும் தொடர்ந்தார். இவரது வாழ்வில் ஏற்பட்ட அதிர்ச்சி சம்பவத்தினால் ஆம் இவர்களது வீடு முற்றாக எரிந்ததன் காரணமாக அனைத்தையும் இழந்து “பொகத்தலாவில்” குடியேறினர் அங்கு அருட்பணி. மெலிடஸ் சேவியரின் வழிகாட்டலுடன் நான் ஒரு குருவாக வரவேண்டும் என ஆசை உருவாகி 1984ம் ஆண்டு குருமடத்தில் இணைந்தார்.

1984ம் ஆண்டு ஆவணி 4ந் திகதி தெஹியிட் 1987 ஆவணி 22ந் திகதி முதல் வார்த்தைப்பாட்டையும், 1993 ஆவணி 7ந் திகதி கடைசி வார்த்தைப்பாட்டையும், 1994 ஆவணி 11ம் திகதி கண்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் மேதகு ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் தமது பணியினை முதலாவதாக 1994 - 2003 வரை இராஜகிரிய திரு-இருதய நாதர் ஆலயத்திலும், 2003 - 2004 வரை புனித ஆசீர்வாதப்பர் சபையின் பொருளாளராகவும், 2004 - 2007 புனித அந்தோனியார் கல்லூரியின் விடுதி பொறுப்பாளராகவும், 2008 - 2015 கண்டி கட்டுகஸ்தோட்ட திரு இருதய நாதரின் ஆலயத்தின் பங்கு குருவாகவும் செயற்பட்டார். 2015ம் ஆண்டியிலிருந்து மீண்டும் உதவிப்பங்குத்தந்தையாக திரு இருதயநாதர் ஆலயத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

இயற்கையிலே அனைவருடனும் அன்பாக பழகும் இவர் தனது பணி வாழ்வில் இன, மத, பேதமின்றி அனைவரையும் சமமாக மதித்து மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து துயர் துடைப்பதில் முன் நிற்க தயங்கமாட்டார். புனித பேதுரு எழுதிய முதல் திருமுகத்தில் குறிப்பிடுவது போல “உங்கள் கவலையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்” (1பேதுரு 5:7) உங்கள் பிரச்சினை என் பிரச்சினை என ஆறுதல் கூறி தோளோடு தோள் நின்று தோழனாக, தந்தையாக, சகோதரராக துயர் துடைக்கும் குணம் கொண்டவர்.

உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர். (மாற்கு 16:5-16) என்ற வார்த்தைக்கு ஏற்றவாறு 25 ஆண்டுகளில் பல பணிகளை மக்களுக்கு கொடுத்துள்ளார்.

“வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம், கண்களால் கண்டோம், உற்றுநோக்கினோம், கையால் தொட்டு உணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கின்றோம்”. (1யோவான் 1:1-2) என்ற இறைவாக்கின்படி இறை அழைத்தலை தெளிவாக உணர்ந்து துறவற வாழ்வின் உட்பொருளை கண்டுபிடித்து அதை வாழ்வாக்கி நிறைவுகண்டவர்.

ஆகவே வெள்ளிவிழா காணும் அருட்பணி. மைக்கல் சந்தானம் அடிகளார் தொடர்ந்தும் தமது பணியினை சிறப்புடன் ஆற்ற எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இயேசு அழைத்தார் வலைகளை கரைகளில் விட்டு விட்டு அவரைப் பின்பற்றினார்கள் என்ற நற்செய்தியின் கூற்றின்படி நாமும் அவரது குரலுக்கு செவிசாய்த்து நற்செய்தியினை பரப்பிட முன்வருவோம். நற்செய்தி அறிவிக்க வருவோரின் பாதங்கள் மலர்களைப் போல எத்துணை அழகாய் இருக்கின்றன (எசா 52:7). ஆகவே இறைவனின் பணியினை தொடர்ந்து ஆற்ற முன்வருவோம். அத்துடன் வெள்ளிவிழா திருப்பலி எதிர்வரும் 2019.08.18 அன்று வெகுசிறப்பாக கொழும்பு உயர்மறைமாவட்ட வழிபாட்டுக்கு பொறுப்பாளர் அருட்பணி. சூசைநாதன் (பு.ஆ.ச) தலைமையில் நடைபெற உள்ளது.

A. கிறிஸ்டினா,
திரு இருதய ஆலயம், இராஜகிரிய

**இவ்விரு அருட்தந்தையர்களையும் யூபிலி ஆண்டு நிறைவில் வாழ்த்துவதோடு அவர்களுடைய குருத்துவப் பணி வாழ்வு மேலும் சிறக்கவும், உடல், உள, ஆன்ம நலன்களைப் பெற்று வாழவும் ஞானஒளி வாழ்த்துகின்றது.**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு (18.08.2019)

**›› பேதுரு ‹‹**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு திருவழிபாட்டில் ஆர்வமுடன் பங்குகொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்கு வழங்கும் வார்த்தைகளை ஆழமாக சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். அழிவிற்கும் ஆக்கத்திற்கும் பயன்படும் 'தீ' என்ற சொல்லை உருவகமாகப் பயன்படுத்தி இயேசு பேசுகின்றார். தீ மூட்ட வந்தேன் என அவர் அடையாளப்படுத்துவது அன்புத் தீ, நீதித்தீ, உண்மைத்தீ, தியாகத் தீ என நாம் பொருள் கொள்ளவேண்டும். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவி எனும் தீ நம் உள்ளங்களில் பற்றி எரியவேண்டும். நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் அன்பு, நீதி, உண்மை போன்றவற்றிற்கு எதிராக வரும் தீமைகளை எரிக்க நாம் முன்வரவேண்டும். சமத்துவம் சமதர்மம் உருவாக நாம் உழைக்கவேண்டும் அப்பொழுதுதான் தீ மூட்டவே வந்தேன் என்ற இயேசுவின் பிள்ளைகளாவோம்.

**முதல் வாசகம் : எரேமியா 38:4-6,8-10**
நாடெங்கும் வழக்குக் காரணமாய் இருக்கும்படி என்னைப் பெற்றாயே.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்.

**இரண்டாம் வாசகம் : எபி 12:1-4**
நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 12:49-53**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்புத் தீயை அகிலமெங்கும் அணையாது பரவச்செய்யும் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவிகள், இறைமக்கள் யாவரும் தம் பணி வாழ்வில் அன்புடமைச் சமுதாயத்தை உருவாக்க அயராது உழைத்திட வரமருள வேண்டுமென்று...

உலகின் பல பாகங்களிலும் எம் நாட்டிலும் ஏற்படும் வன்முறை கலவரம் போராட்டம் போன்றவைகளும் சமயத்தின் பேரால் அரங்கேற்றப்படும் பகைமைகளையும் களைந்து அன்பும் நீதியும் உண்மையும் நிறைந்த சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று...

"உம்சொல் என் இதயத்தில் பற்றியெரியும் தீ போல இருக்கின்றது" என்ற எரேமியாவின் வார்த்தைக்கேற்ப இறைவார்த்தை என்னும் நெருப்பால் வலுப்பெற்று நாம் வளரவும் இன்னும் நாம் காணும் சமூக அவலங்கள் ஒழிய நாம் திருமுழுக்கால் பெற்றுக்கொண்ட தீயை அணையாது காக்கவும் வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு (25.08.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு தினத்திலே இறைவனின் இல்லத்தில் ஒன்று கூடியிருக்கும் நல் உள்ளங்களே இறைமக்களே - மனித வாழ்வு இறைவனின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு அமையும் பொழுது இறையாட்சிக்கு ஏற்ற மனிதர்களாக நாம் வளர்கின்றோம். இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவிடம் ஓர் விசித்திரமான கேள்வி எழுப்பப்படுகின்றது. "ஆண்டவரே மீட்புப் பெறுவோர் ஒரு சிலர் தானா?" நம் வாழ்வு கிறிஸ்துவை பிரதிபலிக்காத போது நம் மனதில் தோன்றும் ஒரு விதமான சந்தேகம் தான் இந்தக் கேள்வி விடாமுயற்சியோடு போராடி இடுக்கமான வாயில் வழியாக இறையாட்சிக்குள் நுழைய முயலுங்கள் எத்துணை இடர் வரினும், துன்பம் வரினும், வேதனை ஏற்படினும் விசுவாசக் குறைவு கொள்ளாது கிறிஸ்துவின் அன்புக்கட்டளைகளை நிறை இறைவார்த்தைக்கு சான்று பகர்கின்ற வாழ்வு வாழவேண்டும். எனவே மீட்பு அடைவோரில் நாமும் இடம்பெற இடுக்கமான நுழைவாயில் நோக்கி இனிதே பயணிப்போம். இறையாட்சியின் பங்காளிகளாவோம். இதற்காக மன்றாடத் தொடரும் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசாயா 66:18-21**
உங்கள் உறவின் முறையாரை அனைத்து மக்களினத்தாரிடையே இருந்து என் திருமலைக்கு அழைத்து வருவார்கள்.

**பதிலுரைப் பாடல் :**
உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.

**இரண்டாம் வாசகம் : எபி 12: 5-7,11-13**
ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாமோ அவர்களைக் கண்டிக்கிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 13:22-30**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அனைவருக்கும் இறையாட்சியைப் பெற்றுத்தர அயராது உழைக்கும் திருஅவைக்காகவும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவருக்கும் உமது அருளாசியை வழங்கவும், மக்களின் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாக இயங்கும் அனைவரும் தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் சரிவர நிறைவேற்றவும் துணைபுரிய வேண்டுமென்று...

எமது நாட்டில் துன்புறுவோரின் துயர் துடைக்கவும், ஏழை எளியோரின் வாழ்வை உயர்த்த நாம் உழைக்கவும் மனித நேயத்துடன் வறுமையில் வாடுவோர் நோயாளிகள் அனைவருக்கும் உதவி செய்யவும், பாரபட்சமின்றி மக்களை அன்பு செய்யவும், அதிகாரிகளும் தலைவர்களும் உருவாகவும் வரமருள வேண்டுமென்று...

நமது வாழ்வில் வரக்கூடிய துன்பங்கள் நம்மை மேலான வாழ்வுக்கு இட்டுச் செல்லுகின்றன என்பதை நாம் உணர்ந்தவர்களாக இறைவன் மீது கொண்ட நம்பிக்கையில் நிலையாக இருந்து இடுக்கமான நுழை வாயில் நோக்கிப் பயணித்து இறையாட்சியின் பங்காளிகளாக மாறிட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 10

## அன்பினால் செய்யும் பணி

- உலகின் எந்தப் பொருளுக்காகவும், எந்த மனிதரின் அன்புக்காகவும் நாம் தீமை ஏதும் செய்யக்கூடாது, ஆனால், தேவைப்படுபவரின் நலனுக்காக நல்ல வேலையையும் சிலவேளை மனதார அகற்றி வைக்க வேண்டும்; அல்லது, சிறந்த ஒன்றிற்க்காக மாற்றிவிட வேண்டும்.
- இவ்விதம் செய்வதால் நல்ல வேலை அழிந்து போவதில்லை. ஆனால், சிறந்த ஒன்றாக மாற்றப்படுகிறது.
- அன்பில்லா வெளிவேலை நன்மை பயப்பதில்லை.
- எவ்வளவு சிறியதாய், ஈனமாய் இருந்தாலும் அன்பினால் செய்யும் அனைத்தும் பலனுள்ளதாகி விடுகிறது.
- ஒருவன் என்ன வேலை செய்கிறான் என்று இறைவன் பார்ப்பதில்லை. ஆனால், எவ்விதம் செய்கிறான் என்பதையே எடைபோடுகிறான்.
- அதிகம் அன்பு செய்கிறவன் அதிகம் செய்கிறான்.
- ஒன்றாயினும் நன்றாகச் செய்கிறவன் அதிகம் செய்கிறான்.
- தனது விருப்பத்தை நிறைவேற்றுவதைவிட மக்கள் குலத்திற்குத் தொண்டு செய்பவன் நன்றாகச் செய்கிறான்.
- அன்பாகத் தோன்றுவது பெரும்பாலும் உடல் உணர்ச்சியாகவே இருக்கிறது. ஏனென்றால், இயற்கை நாட்டம், தன் விருப்பம், பரிசு, மோகம், இலகுவான வாழ்வில் பற்றுதல் இவற்றைத் துறக்க எவரும் விரும்புவதில்லை.
- உண்மையான இறையன்பு படைத்தவன் எந்தப் பொருளிலும் பெருமையைத் தேடுவதில்லை. ஆனால், அனைத்திலும் இறைவனின் மகிமை துலங்க வேண்டுமென ஆசிக்கிறான்.
- அவன் யார்மீதும் பொறாமை கொள்வதில்லை. ஏனென்றால், தனக்கென எந்த இன்பத்தையும் நாடுவதில்லை.
- அவன் தன்னில் மகிழ்வுற விரும்புவதில்லை. மாறாக, எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனில் இன்பம் துயக்க விரும்புகிறான்.
- எந்த நன்மையும் பிறர் எவருக்குமன்று, ஆனால் அவை அனைத்திற்கும் ஊற்றாகவும், எல்லாப் புனிதர்களின் இன்ப அமைதியின் இலக்காகவும் அமையும்.
- எள்ளளவேனும் உண்மை அன்பு உள்ளவன் உலகப்பொருள் அத்தனையும் பயனற்றவை என்பதை உடனே கண்டுகொள்வான் அன்றோ!

தொடரும்

## உன்னதம்

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ்
அவரிடம் ஒருவர் கேள்வி கேட்டார்
"உன்னதமான மனிதர் யார்?"

சாக்ரடீஸ் சொன்ன பதில் இது
எவனொருவன் சுயநலத்திற்கு அப்பாற்பட்டு
வாழ்கின்றானோ.....
எவனொருவன் துன்பத்தை வென்று நன்மை
செய்கின்றானோ....
எவனொருவன்
இருளடைந்த கண்களுடன்
உலகைப் பார்க்காமல்
ஒளியுடைய கண்களுடன்
உலகைப் பார்க்கிறானோ
அதுவும் உலகை
உள்ளது உள்ளப்படியே பார்க்கிறானோ
அவனே உன்னதமான மனிதன்!



**உற்றுப் பார் உனக்குள் தான்
உறைந்திருக்கிறது உனது உள்ளம்.**

**மனிதனின் வார்த்தைகள்
உன்னைக் காயப்படுத்தலாம், ஆனால்
இறைவனின் வார்த்தைகள் உன்னை
ஆற்றும் மறந்திடாதே!**

**இதய சுத்தம் என்பது உலக சிந்தையை
வெறுப்பதால் அல்ல, இறைவனின்
சிந்தையை ஏற்பதால் வருவதாகும்!**

# இரத்தினபுரி மறைமாவட்ட ருவான்வெல்ல, புனித அன்னம்மாள் ஆலயமானது புதிய ஆலயமாக இறைவனின் கிருபையினாலே ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது (2018-2019). இது இலங்கையில் நிகழ்ந்த ஒரு பெரும் சாதனையாகும். இவற்றின் நிகழ்வுகள் சில...


புதிய ஆலயம்


புதிய பங்குமனை


லூர்து அன்னையின் புதிய கெபி


புனித பொருட்கள் விற்பனை நிலையம்


சிலுவைப்பாதை நிலைகள்


புதிய பங்குமண்டபம்

பங்குதந்தை கிளிபர்ட் ஷேர்வின் அடிகளாரால் இவ்வாலயம் பலபேரிடம் நிதி சேகரிக்கப்பட்டு, ஒரு ஆண்டுக்குள் மேற்கூறப்பட்ட அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் பற்றிய விபரங்கள் 04.08.2019 அன்று வெளியாகிய ஞானஒளி பத்திரிகையில் காணப்படுகின்றது. வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

நன்றி. பங்குத்தந்தை. கிளிபர்ட் ஷேர்வின் அடிகளார்.


நற்கருணை நாதர் சிற்றாலயம்

இன்று நம் தாய்த் திருஅவை ‘அன்னை மரியா விண்ணிற்கும் , மண்ணிற்கும் அரசி” என்ற விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. தூய்மை, தாழ்ச்சி, பணிவு, கீழ்ப்படிதல், அசைக்க முடியாத நம்பிக்கை, துன்பங்களில் துவண்டு போகாத மனவுறுதி, கனிந்த உள்ளம் போன்ற நற்குணங்களால் அணி செய்யப்ட்ட நிகரற்ற பெண்மணி அன்னை மரியா. பாவ மாசில்லாத பிறப்பு அவரின் மற்றுமோர் சிறப்பு. ‘இதோ நான் ஆண்டவரின அடிமை” என்று அவர் சொன்ன ஒற்றை வரி அவரை விண்வரைக்கும் உயர்த்தியது. படைப்பிற்கெல்லாம் மேன்மைமிகு அரசியாக முடிசூட்டப்பட்டார் இங்ஙனம் மரியா தன் மகனின் விண்ணக மாட்சியில் பங்கு பெற்றுள்ள ஆழமான உண்மையை உலகிற்கெல்லாம் வெளிப்படுத்தவே இந்த விழா. தொடக்கக் காலத்திலிருந்தே இவ்விழா கொண்டாடப்பட்டு வந்தாலும் 1956ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பத்திநாதரால் மே மாதம் 31ஆம்நாள் இவ்விழா கொண்டாடப்பட வழிபாட்டு நாட்காட்டியில் கொண்டு வரப்பட்டது. பின்னர் 1969 ஆம் ஆண்டு திருத்தந்தை 6ஆம் பவுல் புதிய வழிப்பாடு நாட்காட்டியில் இந்த விழாவை மரியாவின் விண்ணேற்பு விழாவிற்கு அடுத்து, ஆகஸ்டு 22ஆம் நாள் கொண்டாடுவதற்கு ஆவண செய்தார். இதன்படிதான் நாம் இன்று அரசியான கன்னி மரியாவின் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

# தூய கன்னி மரியா விண்ணக, மண்ணக அரசியாக முடி சூட்டப்பட்ட நாள் [ஆவணி 22]



மேலும் நம் திரு அவை தந்தையர்கள் பலரும் கன்னி மரியா அரசியாக இருக்கிறார் என்பதை தங்கள் எழுத்துக்களில் பதிவு செய்திருக்கிறார்கள். ‘விண்ணுலக மகிமையிலே உருவான கன்னிமை குன்றா அரசியே’ என்று எஃப்ரேம் கூறுகிறார். ‘மண்ணில் வாழ்வோரின் மாதரசியே’ என்றும், ‘ஒவ்வொரு படைப்பின் அரசியே’ என்றும் புனித ஜெர்மானுஸ் அழைக்கிறார். மேலும் அன்னையை நோக்கிய மன்றாட்டு மாலையில் ‘சம்மனசுக்களின் அரசியே, இறைவாக்கினர்களின் அரசியே, திருத்தூதர்களின் அரசியே, இரக்கத்தின் அரசியே, அமைதியின் அரசியே’ என்றெல்லாம் புகழ்ந்து மரியாவை அழைக்கின்றோம்.

மற்றும் (திவெ 12:1) ‘வானின் பெரியதொரு அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்’ என்று விவிலியம் சான்று பகர்கின்றது. கதிரவனை அதாவது சூரியனை ஆடையாக அணிவதென்பது ஓர் அசாதாரண செயல் (சாதாரண செயல் அல்ல) மனிதத்தன்மைக்கு அப்பாற்பட்ட செயல்.

நிலா அவருடைய காலடியில் இருந்தது. காலம் காலமாக மனிதன் நிலாவை காலத்தையும், நேரத்தையும் கணக்கிடும் ஒரு கருவியாகவே பயன்படுத்தி வந்திருக்கிறான். அமாவாசை, பௌர்ணமி, இதை வைத்துத்தான் விழாக்கள், நற்காரியங்கள் முன்குறிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலா அன்னையின் காலடியில் இருப்பது ‘முக்காலத்தையும் ஆள்கின்றவர்” என்பதைக் குறிக்கின்றது அல்லவா! ‘விண்மீன்களைச் சூடியிருத்தல்’ என்பது கணக்கிட முடியாத அல்லது வியக்கத்தக்க நிலையைக் காட்டுகின்றது. அதேபோல் கடவுள் ஆபிரகாமிடம் ‘உன் வழிமரபினரை வானத்து விண்மீன்களைப்போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகச் செய்வேன்’(தொ.நூல் 15:5) என்கிறார். இதுவும் எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டதொரு நிலையைத்தான் சுட்டிக்காட்டுகின்றது.

கதிரவன், விண்மீன், நிலா இவையெல்லாம் ஒளியின் ஊற்றாகவும், வழிகாட்டும் விளக்காகவும் இருக்கின்றன. அதேபோல் அன்னை மரியாவும் இவ்வுலகத் துன்ப இருளில் தவிக்கும் மக்களுக்கு வாழ்வையும், வழியையும் காட்டும் அரசியாக இருக்கின்றார். உரோ 8:30). புனித பவுல் இவ்வாறு கூறுகிறார்...‘தாம்முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார், தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கியிருக்கிறார். தமக்கு ஏற்புடையோரைத் தம் மாட்சிமையில் பங்குபெறச்செய்தார்” என்று கூறுகின்றார். தொடக்கநூல் 3:15 ‘உனக்கும், பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்” என்று கடவுள் சொன்னபோதே அன்னை மரியாவை முன்குறித்து வைத்து விட்டார். பின்பு அமல உற்பவியாகப் பிறக்க வைத்து தமக்கு ஏற்புடையோராக்கினார். ஏற்புடையவராக இருந்ததல் ‘இதோ நான் ஆண்டவரின் அடிமை’ என்று அன்னை மரியாவால் சொல்ல முடிந்தது. சொன்னதோடு அதற்கேற்ப வாழ்ந்து காட்டி தன் இறை மகனோடு விண்ணக மாட்சியில் பங்குபெற முடிந்தது. ‘நான் ஆண்டவரின் அடிமை” என்றுசொல்லி தன்னையே தாழ்த்தியதாலன்றோ ‘தம்மைத் தாழ்த்துவோர் உயர்த்தப்படுவார்’ (புனித லூக்கா 14:11) என்ற நற்செய்திக்கேற்ப இன்று விண்ணளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளார். மேலும் இறைவனுக்குக் கொடுத்த வாக்கிற்கொப்ப தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் இறைவனின் திட்டத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிவதிலும், தாய்மையோடு துன்புறுவதும், துன்புறுவாரோடு உடனிருத்தலும், சோதனைகளையும், வேதனைகளையும் பொறுமையோடு தாங்கி, இறைச்சித்தத்திற்கு தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்தார். இறுதிவரை திருத்தூதர்களாடு ஒன்றிணைந்து நற்செய்திப் பணியாற்றி நம் திருஅவையைக் கட்டி எழுப்புவதில் உறுதுணையாக இருந்திருக்கிறார். அதனால்தான் விண்ணக, மண்ணக அரசியாக மகிமைப்படுத்தப்பட்டார். நம் திருவிவிலியத்தில் இதற்கு ஏராளமானச் சான்றுகள் காணக்கிடக்கின்றன (தி.பா 45:9)

> “விண்ணுலக மகிமையிலே உருவான கன்னிமை குன்றா அரசியே”
> “மண்ணில் வாழ்வோரின் மாதரசியே”
> “ஒவ்வொரு படைப்பின் அரசியே”
> “சம்மனசுக்களின் அரசியே”.
> “இறைவாக்கினர்களின் அரசியே”
> “திருத்தூதர்களின் அரசியே”
> “இரக்கத்தின் அரசியே” “அமைதியின் அரசியே”
> என்றெல்லாம் புகழ்ந்து மரியாவை அழைக்கின்றோம்.

‘அருமைமிகு அரசின் மகளிர் உம்மை எதிர்கொள்வர். ஓபீரின்பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி’ யார் இந்த அரசி? நம் அன்னை மரியாதான்.

‘என் அன்பே! நீ முழுவதும் அழகே! மறுவோ உன்னில் சிறிதும் இல்லை” (இ.பா 4:7) மாசுமறுவில்லாத அழகு, என்ன அழகு” என்று நம் அன்னையைப் பாடிப் புகழ்கின்றோம்.

இன்னும் ‘நீ தோட்டங்களின் நீரூற்று, வற்றாத நீர் சுரக்கும் கிணறு. லெபனோனின்று வரும்”(இபா 4:15) என்று அன்னை மரியாதான்.

இவ்வாறு விவிலியம் புகழும் அன்னை மரியை விண்ணக அரசி என்று சொல்வதில் வியப்பொன்றும் இல்லை. கி.பி 5ஆம் நூற்றாண்டில் எபேசு பொதுச்சங்கத்தில் ‘மரியா இறைவனின் தாய்’ என்று அறிவிக்கப்பட்டதன் விளைவாக ‘விண்ணக அரசி” என்ற பட்டமும் வழங்கப்படலாயிற்று. ஏனென்றால் இயேசு கிறிஸ்து விண்ணக அரசராக இருப்பதால் அவருடைய தாய்க்கும் இத்தகைய சிறப்பு. அதனால்தான் அரசர் சாலமோனின் தாய் பத்சேபா தன் மகனைக் காண அரச சபைக்குச் சென்றபோது, அரசர் எழுந்து அவரை எதிர்கொண்டு வந்து வணங்கிய பின் தம் அரியணையில் அமர்ந்துகொண்டார். அரசரின் தாய்க்கு அவரது வலப்புறத்தில் ஓர் இருக்கை போடப்பட்டது(1அரசர் 2:19) என்று வாசிக்கின்றோம். மகன் அரசர் என்றால் தாயும் பட்டத்து அரசிதானே! எனவே, நம் அன்னையும் தம் மகனிடம் நமக்காகப் பரிந்துரைக்கும் அரசியாக இருக்கின்றார். இவ்விழா நாட்களில் நம் அனைத்துத் தேவைகளையும் அன்னையின் பாதம் வைப்போம். அந்த விண்ணக - மண்ணக அரசியும் நமக்காக தன் மகனிடம் பரிந்துரைத்து அருள் வாரங்களை அள்ளித் தருவார் என்பது நிச்சயம். மேலும் நாமும் அவரோடு விண்ணக மாட்சியில் பங்குபெற வழிகாட்ட வேண்டுமென்று அந்த அன்னையிடம் வேண்டுவோம்.

# ஊதாரி மகனின் உவமை



**(புனித லூக் 15: 11-32)**

ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். ............ ........................................................................ ........................................................................ ........................................................................ குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக்கொண்டார். மறுநாள் இரு தெனாரியத்தை எடுத்து சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து ........... ........................................................................ ........................................................................ ........................................................................ என்றார். கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது" என்று இயேசு கேட்டார். அதற்கு திருச்சட்ட அறிஞர், ......... ........................................................................ ........................................................................ ........................................................ ..... ...................... என்று கூறினார்.






# விவிலியப் பகுதி



## புனித மாற்கு நற்செய்தி
**அதிகாரம் 05**

75. இலேகியான் என்பதன் பொருள் என்ன?
76. பன்றி கூட்டத்தில் மொத்தம் எத்தனை பன்றிகள் இருந்தன?
77. பேய் பிடியில் குணமடைந்த மனிதர் இயேசு செய்ததை எந்த நாட்டில் அறிவித்து வந்தார்?
78. இயேசு கடற்கரையில் இருந்த போது யார் அவரது காலில் விழுந்தார்?
79. இரத்த போக்குடைய பெண் எத்தனை ஆண்டுகளாய் இரத்த போக்கினால் வருந்தினாள்?
80. இயேசு தொழுகை கூட தலைவனிடம் என்ன கூறினார்?
81. தொழுகை கூட தலைவன் வீட்டுக்கு சென்ற போது இயேசு யாரை மட்டும் அழைத்து சென்றார்?
82. இயேசு உள்ளே சென்று மக்கள் கூட்டத்தை பார்த்து என்ன கூறினார்?
83. இயேசு சிறுமியின் கையை பிடித்து என்ன உரைத்தார்?
84. தலித்தா கூம் என்பதன் பொருள் என்ன?

தொடர்ச்சி 15ம் பக்கம்

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் :cgnanaoli@yahoo.com**

**மேலே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் ஆகஸ்ட் 19ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.



ஸ்டீவ் சிரச்சன்
தரம் - 04 இராஜகிரிய

# சமூக சேவை



எனது உறவினருக்கு ஒரே மகன். அவன் எட்டாம் வகுப்புப் படிக்கிறான். அவன் பரீட்சையில் நிறைய மதிப்பெண்கள் எடுத்தால்அவனை ஊக்கப்படுத்த அவனது தந்தை ரூபா 5. அல்லது 10 கொடுப்பார், கொடுத்து விட்டு இதைச் செலவு செய்யக்கூடாது உண்டியலில் சேமிக்க வேண்டும் என்று சொல்லி விடுவார். கிறிஸ்மஸ், தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களில் அவன் சேர்த்து வைத்த பணத்திலிருந்து ஓர் ஏழைக் குழந்தைக்கு புத்தகமோ, புத்தாடையோ, வாங்கி தன் மகன் கையாலேயே அந்த ஏழை குழந்தைகளுக்கு கொடுக்கச் செய்வார். இதைப் பார்த்த உறவினர் ஒருவர் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்று கேட்டதற்கு 'இவன் இவ்வாறு செய்தால்தான் என் மகனுக்கு தன் சொந்த பணத்தில் ஓர் ஏழைக்கு உதவிய சந்தோஷம், கிடைப்பதோடு சேமிக்க வேண்டும் என்ற எண்ணமும், பிறக்கும். அதற்காக அவன் நல்ல மதிப்பெண் எடுக்கும் நோக்கத்தோடு படிப்பான் என்றார். அத்தோடு சமூக சேவை செய்யும் எண்ணமும் அவனோடு கூட வளரும் என்றார்.

**சிறுவர்களே, நாமும் உண்டியல் சேர்ப்போமா? ஏழைகளுக்கு உதவி செய்ய முன்வருவோமா...! சிந்திப்போம்...!!**



டியுனிலிஸ்த்ரா
தரம் - 04 இராஜகிரிய

# நற்செய்தியாளர்களை அறிவோம்

## புனித லூக்கா





| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | புனித லூக்கா |
| அடையாளம் | : | எருது |
| காலம் | : | கி.பி.85ல் எழுதப்பட்டது |
| இடம் | : | சிரியா அந்தியோக்கியா |


**இந்நற்செய்தியின் வேறு பெயர்கள் :**

ஏழைகளின் நற்செய்தி, புற இனத்தவரின் நற்செய்தி, அன்பின் நற்செய்தி, செபத்தின் நற்செய்தி, பெண்களின் நற்செய்தி


**நோக்கம் :** இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்டுவது.

**அடையாளத்தின் பொருள் :**

எருது, குருவாகிய செக்கரியா பலி ஒப்புக்கொடுக்கும் சம்பவத்துடன் லூக்கா நற்செய்தி ஆரம்பிக்கப்படுகின்றது. அக்காலத்தில் எருதை பலியிட்டப்படியால், இந்நற்செய்திக்கு எருது அடையாளமாக வழங்கப்படுகிறது.



அல்வின் செனோன்
தரம் - 02 இராஜகிரிய



J. எரோன்
இராஜகிரிய

**சரியான விடையளித்தவர்களுக்கு எமது பாராட்டுகள்**

1. ஏட்றியன் ஜவன், தரம் 4, புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டி
2. ருக்ஷா, தரம் 2, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.
3. அனாயா, தரம் 3, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.

**வர்ணம் தீட்டுக.**






# உன்னோடு ஒரு நிமிடம்

# நீ நீயாக இரு!



நீ நீயாக இருப்பதைத் தான் நானும் விரும்பு-கின்றேன். யாரையும் போல் இருக்க வேண்டுமென ஆசை கொள்ளாதே

யானையின் காதுகளுக்கு எலிகள் ஆசைப்படக் கூடாது உனது சாகோதரன் நடப்பதைப் போல் நீ நடக்கத் தேவையில்லை. உனது நண்பனின் ஆளுமையை கடைப்பிடிக்கத் தேவையில்லை. உன் ஆசிரியை பேசுவதுபோல் நீ பேசத் தேவையில்லை.

உனக்குப் பிடித்த புனிதர் போல் நீ செபிக்கத் தேவையில்லை. மற்றவர் செய்வதுபோல் நீயும் செய்ய வேண்டியதில்லை.

மற்றவர்கள் உன்னைவிட உயர்ந்தவர்களல்லர். மற்றவர்கள் உன்னைவிட குறைந்தவர்களும் அல்லர் நீ நீதான்! அவள் அவள்தான்! அவன் அவன்தான்! ஆகவே நீ நீயாக இரு.

நீ எப்படி இருக்கிறாயோ அப்படியே நான் உன்னை அன்பு செய்கிறேன் என்பதையும் புரிந்துகொள் நீ இருப்பது போலவே நான் உன்னை அன்பு செய்கின்றேன்.

நீ எவ்வழியில் இருந்தா-லும் உன்னை அன்பு செய்கிறேன். நீ இருக்கும் விதம் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். நீ இருக்கும் நிலை பற்றி நான் மகிழ்ச்சியடைவேன்.

நான் ஒருவரை மற்றவரை விட சிறந்தவராகப் படைப்பதில்லை. உன்னை யாரும் பிரதி எடுக்க முடியாது. நான் உன்னை அடுத்தவன் போல வாழ விரும்புவதில்லை.

நான் உன்னை ஆபிரகா-மாகவோ மோசேயாகவோ தூய சவேரியராகவோ வாழ விரும்புவதில்லை.

புனிதர்கள் நல்லவர்க-ளிடம் இருக்கும் நல்ல குணங்களை உன் வாழ்வில் கடைப்பிடி அதுவே உன்னை வளரச் செய்யும்.

நீ நீயாகத்தான் வாழ வேண்டும்! நீ எப்படி இருக்கின்றாயோ அப்படியே நான் உன்னை ஏற்றுக் கொள்கிறேன்.

நீ உன் சுயத்தோடு இரு நீ இருக்கும் நிலை-யிலேயே நான் உன்னை அன்பு செய்கிறேன். நீ இருக்கும் நிலையே எனக்குப் பெருமை தருகின்றது.

மற்றவர்கள் எதிர்பார்ப்-பின்படி நீ உன் வாழ்வை அமைத்துக் கொள்ளத் தேவையில்லை. அடுத்தவர்களின் எதிர்பார்ப்பின் படி நடக்கும் போது “மற்றவர்கள் என்னை விடச் சிறந்தவர்கள்” என்று எண்ணுகின்றாய்.

கடைசியில் நீ உனது சொந்த வாழ்வை வாழாமல் விட்டு விடுகின்றாய். அடுத்தவருடைய வாழ்வானது உன் வாழ்வைக் கட்டுப்படுத்தக் கூடாது.

நீ உனக்கென்று ஒரு சில எதிர்பார்ப்புகளை வைத்துக் கொள் அவை அனைத்தும் ஆரோக்கியமான எதிர்பார்ப்புக்களாக அமைய வேண்டும்.

உன் எதிர்பார்ப்புகள் யதார்த்தமானவையாகவும் அறிவுப்பூர்வமான-வையாகவும் சரியானவையாகவும் கடைப்பிடிக்கக் கூடியவையாகவும் இருக்கும்போது அவை நிம்மதியையும் மகிழ்ச்சியையும் வெற்றியையும் உனக்குத் தருகின்றன.

நீ இயல்புக்கு மாறான, ஆரோக்கியமற்ற, எதிர்பார்ப்புகளை வைத்திருந்தால் அவை மன உளைச்சலையும் துன்பத்தையும் உன்னிடம் உண்டாக்கும்

வானவில்லுக்கு யாரும் வண்ணம் அடிக்கத் தேவையில்லை. வேர்களுக்கு வசதி மண்ணுக்குள்தான் வானத்தை நோக்கி வளர வேண்டுமென எந்த வேரும் யாரிடமும் கேட்பதில்லை!

உடலெல்லாம் முட்களாக கள்ளிக-ளுக்கு இருக்க காரணம் இருக்கிறது. வாழ்வ-தற்கான வரமேயொழிய சாவதற்கான சாபம் அன்று.

நண்பா
நீ நீயாக இரு!

---

# முடிவல்ல! இடைவேளை!

## தேர்வு முடிந்தபிறகு என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக்கூடாது? விடுமுறை நாட்களை எப்படிச் செலவிடலாம்?

தேர்வு முடிந்தபிறகு என்ன செய்யலாம்? மாணவர்களுக்கு இது எப்போதும் ஒரு கனவு கேள்வியாகவே இருக்கும். ஏதோ ஒரு கனவுக் கோட்டைகள்! விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வீடு போய்ச் சேர்வதுதான் முதல் கனவு! நண்பர்களோடு அரட்டை அடிப்பது, உல்லாசப் பயணம், உறவினர் வீடு என்று ஏகப்பட்ட எண்ணங்கள்!

பெற்றோர்களின் நினைவுகள் நேர் எதிராக இருக்கும் விடுமுறை நாட்களில் பிள்ளைகளை எப்படிச் சமாளிப்பது என்று இவர்கள் சிந்திப்பார்கள். நகரங்களில் பெற்றோர்கள் நம் பிள்ளைகளின் திறமைகளை இன்னும் எப்படி வளர்க்கலாம், இன்னும் என்னென்ன போட்டிகளுக்கு அனுப்பலாம், பயிற்சி வகுப்புக்களில் சேர்த்துவிடலாம்? இவர்கள் இப்படிச் சிந்திப்பார்கள்.

இதில் எது சரி? பெற்றோர் பக்கம் நியாயம் இருக்கிறதா? பிள்ளைகள் பக்கமா?

இரண்டு பக்கமும் நியாயம் இருக்கிறது. ஆண்டு விடுமுறையை ஒரு திரைப்படத்தின் இடைவேளைக்கு ஒப்பிடலாம். இது இடைவேளைதான். திரைப்படம் இடைவேளைக்குப் பிறகு தொடரும்! திரைப்படம் முடிந்துவிடவில்லை. கற்கும் பணியும் முடிந்துவிடவில்லை. அதே நேரத்தில் இடைவேளை தற்காலிகமானதாக இருந்தாலும் அது இடைவேளைதான்! இடைவேளை எந்தப் பணிக்கும் தேவைதான். நாம் எல்லாரும் எல்லா வயதிலுமே அவ்வப்போது ஒன்றிரண்டு வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று உளவியல் எல்லையைத் தாண்டுபோம் கண்டிப்பாக ஓய்வுவேண்டும்.

எனவே, ஆண்டு விடுமுறையை நாம் எப்படிச் செலவிடலாம் என்கிற எண்ணங்களோடு தேர்வுப் பயணம் என்கிற இந்தக் கட்டுரைத் தொடரை நிறைவு செய்துகொள்வோம் சில முக்கியமான குறிப்புகளை மட்டும் இங்கே ஆராயலாம்.

### 1. நடந்ததெல்லாம் நடந்ததுதான்

தேர்வு முடிந்தவுடன், நாம் எழுதியதை மற்றவ-ர்கள் எழுதியதாகச் சொல்லிக்கொள்வதோடு ஒப்பிடுவது ஒரு வழக்கம். நான் அதை எடுத்திருக்கலாம்! அப்படி எழுதி இருக்கலாம். இப்படியெல்லாம் புலம்புவதும் தவிப்பதும் வழக்கம்.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் வீட்டுக்கு வந்ததும் இத்தகைய கேள்விகளில் இறங்குவார்கள். இதை ஏன் விட்டாய்? அது ஏன் தப்பாகப் போனது என்பார்கள். உண்மையில் இத்தகைய ஆராய்ச்சிகளும் புலம்பலும் தேவையற்றது. மாணவர்களின் மன உளைச்-சலை அதிகரிக்கக்கூடியது. குறிப்பாக மறுநாளும் தேர்வு இருக்கும்போது கூட சிலர் இப்படி முதல் நாள் தேர்வைப் பற்றிப் புலம்புவார்கள்! இது உண்மையில் ஆபத்தானது. மறுநாள் தேர்வையும் பாதிக்கக்கூடியது.

போனால் வராது. பொழுது போனால் தங்காது என்பார்கள். நடந்தது, நடந்ததுதான்! எழுதி முடித்ததும் முடித்ததுதான் அதை இனி நாம் மாற்ற முடியாது.



அடுத்த நாள் தேர்வு இன்னும் நம் கையில்தான் இருக்கிறது. இருக்கிற நேரத்தை அடுத்த தேர்வுக்கான முயற்சிகளில் செலவிடுவோம். அதில் கொஞ்சம் கூடுதல் மதிப்பெண்களைப் பெற முயல்வோம்.

எல்லாத் தேர்வுகளும் முடிந்தபிறகு, நாம் விரும்பினால், ஒவ்வொரு தாளிலும் நாம் எங்கே தவறி இருக்கிறோம். எவ்வளவு மதிப்பெண் வரும் என்று கொஞ்சம் ஆற அமர அலசிப் பார்க்கலாம். தேர்வின் முடிவுகள் வரும்போது, நாம் எந்த விடைத்தாளையாவது மறுதிருத்தம் செய்ய விண்ணப்பிக்கலாமா என்று தெரிந்துகொள்ள இது உதவும் அவ்வளவுதான்.

இதற்கு மேல் நடந்து முடிந்ததைக் குத்திக் கிளறுவதில் எந்தப் பயனும் இல்லை. மாணவர்களும் பெற்றோர்களும் இதை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.

### 2. படித்ததெல்லாம் மறப்பதற்கில்லை

சில மாணவர்கள் தேர்வு முடிந்தால் போதும் என்று காத்திருப்பார்கள். வீட்டுக்கு வந்ததும் புத்தகங்களையெல்லாம் மூட்டை கட்டி விசிறிவிடுவார்கள். மற்ற எவ்வளவோ வேலைகள் அவர்களுக்கு. அடுத்த வகுப்பிற்குச் செல்லும்போது இவர்கள் முந்திய வகுப்பில் படித்த எதுவும் நினைவில் இருக்காது. முற்றிலும் புதிதாகப் படிப்பதைப் போலவே பழைய வகுப்பில் படித்தவற்றையும் திரும்பிப் படிக்க வேண்டிய நிலையில் இருப்பார்கள்.

ஆண்டு முழுவதும் சிரத்தையோடு படிப்பது தேர்வு எழுதுவதற்காக மட்டுமல்ல. தேர்வில் நல்ல மதிப்பெண் வாங்கி அடுத்த வகுப்புக்குப் போவதற்காகவும் அல்ல. நாம் படிப்பது வாழ்க்கைக்காக, வாழ்நாள் முழுவதும் பயன்படுத்துவதற்காக! வாழ்நாள் முழுவதும் பிழையின்றிப் பேசுவதற்காக! எழுதுவதற்காக! நல்ல தொழிலில் ஈடுபடுவதற்காக! நன்றாக, அறிவியல் வழித்தடத்தில் வாழ்வதற்காக!

நாம் படிக்கும்போது இந்த உள்ளுணர்வோடு படிக்கவேண்டும். படித்த பிறகும் இந்த உணர்வோடு கற்றுக்கொண்டவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வேறு சிலர் இருக்கிறார்கள். இவர்களுக்குப் படித்த செய்திகளைவிட அவர்கள் படிக்க வாங்கிப் பயன்படுத்திய புத்தகங்கள், குறிப்பேடுகளில் தான் அதிக அக்கறை. படித்ததையெல்லாம் அப்போதே மறந்து விடுவார்கள். படித்த புத்தகங்களெல்லாம் பத்திரமாக இருக்கும்.

எனது நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவருக்கு இரண்டு பையன்கள். அவர்கள் இருவருமே வேலைக்குப் போய் விட்டார்கள். ஆனால் அவர்கள் நர்சரிப் பள்ளி தொடங்கிப் படித்த புத்தகங்கள் எல்லாம் பத்திரமாக இருந்தது. அந்தப் புத்தகங்கள் மேல் எவ்வளவு தடியான தூசி படலம் படிந்திருந்தது என்று கேட்காதீர்கள். புத்தங்கள் மேல் அவருக்கு அவ்வளவு பக்தி. நூல்கள் இடத்தை அடைப்பதற்காக அல்ல, நாம் உள்வாங்கிக் கொள்வதற்காக பயன்படுத்திக்-கொள்வதற்காக.

அடுத்த வகுப்பிற்குச் சில நூல்களோ, குறிப்பேடுகளோ பயன்படலாம். சில பொது அறிவு நூல்களும் பயன்படலாம். பொரும்பாலான பயிற்சிக் குறிப்புக்கள், வினாத்தாள்கள் போன்றவற்றை அடுத்து வரும் மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுத்துப் பழகுவோம்.

### 3. பயனுள்ள பொழுதுபோக்குகள்.

விடுமுறை நிறைய ஓய்வெடுக்கத்தான்! மகிழ்ச்சியாக....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# படைப்பைப் பாதுகாப்பதில் இளையோரிடம் புதிய சிந்தனைகள்



ஐரோப்பா, தன்னை உருவாக்கிய தந்தையரின் கனவுகளாகத் தொடர்ந்து நடைபோடும், தனது தனிப்பண்பை எடுத்துரைக்கும், வரலாறு, கலாச்சார மற்றும் புவியியல் ஒன்றிப்பை செயல்படுத்துவதை உண்மையாக்கும் என்று, தான் நம்புவதாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

இத்தாலிய La Stampa தினத்தாளின், Vatican Insider என்ற இணையதள அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான Domenico Agasso என்பவருக்கு அளித்த நீண்ட நேர்காணலில், ஐரோப்பா, தனக்குள்ளே முடங்கிவிடாமல், மக்களின் தனித்துவங்களை மதிக்க வேண்டும் என்று திருத்தந்தை கூறியுள்ளார். அத்துடன், அரசியல், புலம்பெயர்ந்தோர், அமேசான் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம், சூழலியல், திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப்பணி போன்ற பல விவகாரங்கள் குறித்த கேள்விகளுக்கும் பதில் சொல்லியுள்ளார், திருத்தந்தை நாம் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள், எவருமே இரண்டாம்தரம் அல்ல, எனவே, ஒவ்வொரு உரையாடலையும், நமது சொந்த தனித்துவத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை, எடுத்துக்காட்டாக, நான் கத்தோலிக்கர் என்ற நிலையிலிருந்து உரையாடலைத் தொடங்காவிட்டால், என்னால் கிறிஸ்தவ ஒன்றிப்பை அமைக்க இயலாது என்று சொல்லி, ஒவ்வொருவரின் தனித்துவத்தின் மாற்ற முடியாத தன்மை பற்றிக் கூறினார்.

போர் பற்றிய கருத்து தெரிவிக்கையில், அமைதிக்காக நம்மை அர்ப்பணித்து அதற்காக உழைக்க வேண்டும் என்றும், ஆப்ரிக்க கண்டத்தில் நிலவும் பசி மிகவும் கவனம் செலுத்துப்பட வேண்டியது என்றும், நாடுகளின் பிரச்சனைகள் களையப்பட உதவிசெய்வதால், புலம்பெயர்வுகளை பெருமளவில் நிறுத்த முடியும் என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

பூமியின் வளங்கள் அதிகப்படியாக சுரண்டப்படுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாளன்று வெளியான தகவலில், இவ்வாண்டுக்கு, மறுஉற்பத்திக்குத் தேவையான வளங்கள் அனைத்தையும் மனிதர் ஏற்கனவே கரைத்துவிட்டனர் என்ற தகவல் அதிர்ச்சியைக் கொடுத்தது என்ற திருத்தந்தை, அமேசான் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் மிகவும் அவசியமானது என்று கூறினார்.

அமேசான் இப்பூமிக்கோளத்தின் வருங்காலத்திற்கு மிகவும் முக்கியமானது, நாம் சுவாசிக்கும் ஆக்ஜிசனில் பெரும்பகுதி அங்கிருந்தே வருகின்றது என்றுரைத்த திருத்தந்தை, காடுகளை அழிப்பது என்பது, மனித சமுதாயத்தைக் கொலை செய்வதாகும் என்றும் தெரிவித்தார்.







## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

"உயரிய மகிமைக்கு தன்னைத் திறக்கும் விடியல்களைக் கொண்ட கல்வி, இளையோர் கனவு காண்பதற்கும், அழகு நிறைந்த உலகை உருவாக்கவும் உதவுகிறது".

"எளிமைத்தன்மையில் நம்மை முற்றிலுமாக ஒப்படைத்து, இறைவிருப்பத்தில் முழுமையாக நம்பிக்கை வைத்து விளக்குகளை எரியும்படிச் செய்யவேண்டும் என இந்நாளின் நற்செய்தி நமக்கு அழைப்பு விடுக்கிறது. அவ்வாறு செய்வதன் வழியாக இரவின் இருளை நம்மால் ஒளியூட்ட முடியும்".

"அடிப்படையில், கிறிஸ்தவ சாட்சியம் என்பது, இயேசு உயிரோடு வாழ்கிறார், அவரே வாழ்வின் இரகசியம் என்பதை மட்டுமே அறிவிப்பதாகும்".

"கடவுள் நம்மிடம் ஒப்படைத்துள்ள தம் படைப்பைப் பாதுகாப்பதற்கு, நம் எல்லாருக்கும் பொறுப்பு உள்ளது என்பதை, பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், மரபுகள் மற்றும், மூதாதையரின் அறிவுடன், பூர்வீக இன மக்கள், நமக்கு நினைவுறுத்துகின்றனர்".

"மன்னிப்பின் வழியே, அமைதி கிட்டும் என்பதே, இயேசு காட்டியுள்ள பாதை, ஏனெனில், ஒரு தீமை, மற்றொரு தீமையை ஒருபோதும் திருத்தாது, கடுஞ்சினம், ஒருபோதும், இதயத்திற்கு நன்மையை வழங்காது".


"இயேசு, தமது தோற்றமாற்றத்தில் உயிர்ப்பின் மகிமையை நமக்குக் காட்டுகிறார், அது, இப்பூமியில், விண்ணகத்தின் கணநேர காட்சியாகும்"

# ஆசியாவுக்கென, மக்காவோவில் புதிய குருத்துவ கல்லூரி

ஆசியக் கண்டத்தின் மறைப்பணித்தளங்களில் பணியாற்றச் செல்லும் அருள்பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கென, மக்காவோவின் சீனப் பகுதியில் புதிய குருத்துவ கல்லூரி ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

Neocatechumenal Way அதாவது, தொடக்ககால திருஅவை, புதிதாக திருமுழுக்குப் பெறுகின்றவர்களைத் தயாரித்த முறையில், அருள்பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் விதமாக, திருப்பீட நற்செய்தி அறிவிப்புப் பேராயம், இக்கல்லூரியை உருவாக்கியுள்ளது. இதன் நிர்வாகம், Redemptoris Mater குருத்துவ கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆனி மாதம் 29ம் திகதி, நற்செய்தி அறிவிப்புப் பேராயத் தலைவர், கர்தினால் பெர்னான்டோ பிலோனி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்தபிறகு, இந்த புதிய குருத்துவ கல்லூரிக்குரிய ஆவணத்தில் கையெழுத்திட்டு, அதை அவர் உருவாக்கினார். இந்தப் புதிய குருத்துவ கல்லூரி, மக்காவோவில் அமைக்கப்பட்டுள்ளதற்கு காரணங்களையும் விளக்கியுள்ளது, நற்செய்தி அறிவிப்புப் பேராயம். முன்னாள் போர்த்துக்கீசிய காலனியாகிய மக்காவோ, 1999ம் ஆண்டு டிசம்பரில், சீனாவிடம் அளிக்கப்பட்டது. மத்தேயு ரிச்சி, புனித பிரான்சிஸ்



சேவியர், அலெஸ்ஸாந்த்ரோ வலிஞ்ஞானோ போன்ற இயேசு சபை மறைப்பணியாளர்கள், சீனா அல்லது ஜப்பானில் நற்செய்தியை அறிவிக்கச் சென்றபோது, மக்காவோ வழியாகவே சென்றார்கள்.

Neocatechumenal Way எனப்படும் கத்தோலிக்க இயக்கம், 1964ம் ஆண்டில், இஸ்பெயின் நாட்டின் மத்ரித் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. அதில், தற்போது, உலகெங்கும், நாற்பதாயிரத்திற்கும் அதிகமான குழுக்களும், பத்து இலட்சம் உறுப்பினர்களும் உள்ளனர். நூற்றுக்கும் அதிகமான Redemptoris Mater குருத்துவ கல்லூரிகளும் உள்ளன.

## சித்ரவதைக்குள்ளாகும் கண்களில் விசுவாசத்தைக் காண்கிறேன்

இன்றும் உலகில், திருஅவையின் பயணம், மாறைசாட்சியம் மற்றும் சித்ரவதைகளால் குறிக்கப்பட்டுள்ளது, பழமையான கிறிஸ்தவ மரபுகளைக் கொண்டிருக்கும் நாடுகளிலும்கூட, திருஅவை காழ்ப்புணர்வை எதிர்கொள்கின்றது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார். இத்தாலியின் Concordia Sagittaria என்ற ஊரில், திருஅவையின் முதல் மறைசாட்சி புனித ஸ்தேவான் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய, நற்செய்தி அறிவிப்பு பேராயத் தலைவர் கர்தினால் பெர்னான்டோ பிலோனி அவர்கள், இக்காலத்தில், இணையதளங்கள், முகநூல், இன்ஸ்டகிராம் போன்ற சமுதாய ஊடகங்களிலும் மனித ஆன்மாவின் மோசமான நிலை இடம்பெறுகின்றது என்று கூறினார்.

புனித ஸ்தேவான் பற்றி மறையுரையில் எடுத்துரைத்த கர்தினால் பிலோனி அவர்கள், அப்புனிதர், கிறிஸ்துவைப் பின்பற்றி, தனது ஆன்மாவை இறைவனின் கரங்களில் அர்ப்பணித்து, தன்னை சித்ரவரை செய்தவர்களுக்காக, இறைவனிடம் மன்னிப்பை இறைஞ்சினார் எனவும் கூறினார். கிறிஸ்துவுக்காக சித்ரவதைக்குள்ளாகும் கிறிஸ்தவர்களின் கண்களில், வெறுப்பை அல்ல, விசுவாசத்தையே காண்கிறேன் என்றுரைத்த கர்தினால் பிலோனி அவர்கள், ஈராக்கில், 2014ம் ஆண்டு ஆடி - ஆவணி மாதங்களில் ஐ.எஸ். இஸ்லாமியத் தீவிரவாதிகளால் விரட்டப்பட்ட கிறிஸ்தவர்கள், யஜிதி இனத்தவர், காக்கி இனத்தவர் போன்றோரை நினைத்துப் பார்க்கிறேன் என்று கூறினார். முதல் கிறிஸ்தவ மறைசாட்சி புனித ஸ்தேவான் அவர்களின் புனிதப்பொருள்களை, கி.பி.415ம் ஆண்டில், Kefar Gambaவின் அருள்பணி Luciano என்பவர் அற்புதமாக கண்டுபிடித்தார். இந்த நிகழ்வை, வெனிஸ் மாநிலத்திலுள்ள, Concordia Sagittaria பேராலயம், ஒவ்வோர் ஆண்டும் ஆவணி 3ம் திகதி சிறப்பித்து வருகின்றது.

# விடுமுறைகள், உறவுகளுக்கு உயிரூட்டமளிக்கும் காலம்

விடுமுறைகள், கடவுளோடும், மனிதரோடும் இருக்கின்ற அன்புப் பிணைப்பைப் உயிரூட்டம்பெறச் செய்வதற்கு வாய்ப்பாகவும் உள்ளன என்றுரைத்த திருத்தந்தை, அன்றாட இறைவேண்டல்களைப் புறக்கணியாதீர்கள், ஞாயிறு திருப்பலியையும், மற்றவரோடு நேரம் செலவிடுவதையும் மறவாதீர்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

படைப்பின் அழகு, எல்லாம் வல்லவரின் மகிமை, படைத்தவரின் ஞானம் மற்றும் அவரின் பேரன்பு, ஆகியவற்றைத் தியானியுங்கள் என்றும் போலந்து திருப்பயணிகளிடம் கூறியத் திருத்தந்தை, புதன் பொது மறைக்கல்வியுரையில் கலந்துகொண்ட, கடலில் காப்பாற்றப்பட்ட புலம்பெயர்ந்த சிறாரையும் பாசத்தோடு வாழ்த்தினார். ஏறத்தாழ 50 பேர், Gregoretti



கப்பலால் காப்பாற்றப்பட்டு, அக்சீலியம் அமைப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

# இந்திய பெருமழை உயிரிழப்புகளுக்கு திருத்தந்தை அனுதாபம்



இந்தியாவில் பெருமழையால் உயிரிழந்துள்ள மக்கள் குறித்த திருத்தந்தையின் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிடும் இரங்கல் செய்தி அந்நாட்டு தலத்திருஅவைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் பெயரால் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள இச்செய்தி, அண்மைய நாட்களில் கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, மற்றும், குஜராத்தில் பெய்துவரும் பெருமழையால் உயிரிழந்தவர்கள், மற்றும், தங்கள் உறைவிடங்களை இழந்தவர்கள் குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கிறது. பாதிக்கப்பட்டோருக்கு தன் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிடும் அதேவேளை, துயர் துடைக்கும் பணியில் ஈடுபட்டிருப்போருக்காக தான் செபிப்பதாகவும், இறையாசீரை இறைஞ்சுவதாகவும் திருத்தந்தையின் சார்பில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ள செய்தி உரைக்கிறது.

கடந்த சில நாட்களாக இந்தியாவின் தெற்கு மற்றும் மேற்கில் உள்ள 4 மாநிலங்களில் பெய்துவரும் தொடர்மழையால் 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர், 1 இலட்சத்து 65,000க்கும் அதிகமானோர் உறைவிடங்களிலிருந்து வெளியேறி, நிவாரண மையங்களில் குடியேறியுள்ளனர்.



# நம்பிக்கையில் ஊற்றெடுக்கப்படவேண்டிய நம் கிறிஸ்தவ வாழ்வு

ஆக்கம் : இந்திரா செல்வமலர்
இறையியல் தமிழ்ப்பிரிவு மாணவி.

எமது குடும்ப சூழ்நிலைகளிலும், நாட்டு சூழ்நிலைகளையும் நோக்கும்போது நம்பிக்கை குன்றிக்கொண்டு போவதை காணலாம். குடும்பங்களில் வறுமை, பொருளாதார சிக்கல்கள், உறவுகளிடையே விரிசல்கள் முதலியவற்றை நோக்கும்போது, நம்பிக்கை என்ற வார்த்தையை சிந்திக்கவும் நமது நடத்தைகளில் நம்பிக்கையினை வெளிப்படுத்தவும் நான் செய்யும் சிறுமுயற்சி அமையும் என்பதனை நோக்கமாக கொண்டு எழுதுகின்றேன்.

நம்பிக்கை எனும் பதம் பற்றி ஆராயுமிடத்து எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்ற ஐயமற்ற நிலை என விவிலியசான்றுகள் கூறுகின்றது. இயேசு ஒவ்வொரு நோயாளரையும் குணமாக்கிய வேளையில் “உன் நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று என்கிறார்” ஆபிரகாம் நம்பிக்கையின் கதாநாயகனாகத் திகழ்கின்றார். எந்த சூழ்நிலையிலும் இறைவன் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என நம்புகின்றார் இவ்வாறன பல நிகழ்வுகள் நம்பிக்கை என்பதற்கான தெளிவை பெற்றுத்தருகின்றன.

வரலாற்றிலே நம்பிக்கையின் சான்றுகளை நோக்குவோம். எமது இறைவன் வரலாற்று நாயகன். ஆபிரகாம், ஈசாக்கு முதலியவருடன் பேசிய இறைவன் காலத்தின் அறிகுறிகள் வழியாக எம்முடனும் பேசுகின்றார். திருச்சபை தோற்றம் பெற்ற முதல் இக்காலம் வரை பல புரட்சிகளையும் கலாபனைகளையும் எதிர்நோக்கியது. இந்த துன்பபாதைகளே திருச்சபையில் நம்பிக்கை ஊற்றெடுக்க காரணமாகியது. திருச்சபையின் வரலாற்றிலே சுகந்திரயுகத்திலே திருச்சபை வளர்ச்சியுற்றது. பின்பு அச்சுகந்திரங்களே ஆடம்பர உலகிற்கு அடிமையாக வாழ பழகியது. அக்காலத்திலே பேதங்களும், தப்பறைகளும் உருவெடுத்தன. மீண்டும் திருச்சபைத்தாய் தன்னை புதுப்பித்து நம்பிக்கையின் சத்தியங்களாக பலப்படுத்தி உறுதிபூண்டாள். அதேவேளையில் திருச்சபையின் சுதந்திரத்தை தனதாக்கி வாழ்ந்தபோது மக்கள் தாமாகவே விரும்பி வனாந்தரங்குக்குச் சென்று இறைவனைத் தேடி தவம் செய்தமையால் துறவறம் உருவானது. எனவே வரலாற்று சக்கரத்திலே சமனிலையற்ற தன்மை உருவாகியபோது இன்னொன்றின் புதிய ஆரம்பத்தை உணர்த்தியது. நம்பிக்கையின் மறுபக்கங்களாக உருவெடுத்தது.

இன்று எம்மத்தியில் எவ்வாறான நம்பிக்கை நிலவுகின்றது. குடும்பங்களை நோக்கும்போது அடிப்படை தேவைகள் இன்மையால் விரக்தியான நிலை, புரிந்துணர்வு இல்லாது உறவுகளில் நம்பிக்கையற்ற நிலை, இந்நிலைமைகளை மாற்றியமைக்க பில்லி, சூனியம், வேறு மத சம்பிரதாயங்களை சடங்குகளை நாடிச் செல்லும் நிலை. இறை மனித உறவிலே எங்கு யார் மீது நம்பிக்கை வைக்க... என்று அலைமோதும் நிலை. நாட்டை நோக்குவோமானால் எங்கும் குழப்பமான சூழ்நிலை. பயங்கரவாத தாக்குத்ல, அரசியல் வாதிகளின் ஆதிக்கம், பொருளாதார வீழ்ச்சிகள், பயத்தின் காரணமாக சுதந்திரத்தை இழந்த நிலை, இவை எமது எண்ண அலைகளிலும் வாழ்விலும் மிதந்து வருகின்ற துன்பக்கப்பல்கள். இவ்வாறான நிலையில் எமது நம்பிக்கை வாழ்வுக்கப்பல் மூழ்கிக்கொண்டு அலைமோதுகின்றது. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கைக்கு முதிர்ச்சி அவசியம். இதனை விருத்தி செய்ய எமது ஆன்மீக வாழ்வை எவ்வாறு அணுகுகின்றோம். எம்மிடையே உளமாற்றமானது ஏற்படுகின்றதா? அன்றாட வாழ்வில் பிரச்சினை துன்பங்கள் என்பவற்றை எவ்வாறான மனநிலையோடு நோக்குகின்றோம். எமது நம்பிக்கையை பற்றி நாம் சிந்திக்கும்போதே எமது நம்பிக்கை வாழ்வு மெருகூட்டம் பெறும். புதுப்பிக்கப்படும். எனவே விசுவாச வாழ்வில் மாற்றங்களை பற்றி சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

வீடுகளில், ஆலயங்களில் செபிக்கின்றோம். நவநாட்களை மேற்கொள்கின்றோம். இவற்றை ஒரு சடங்கிற்காகவும், கடமைக்காகவும் மட்டுமே மேற்கொள்கின்றோம். சிந்திப்போம். இவற்றோடு எமது உள்ளத்தை ஒருங்கிணைக்க மறுக்கின்றோம், மறக்கின்றோம். கடவுள் எம்மிடம் எதிர்பார்ப்பது “கடவுளுக்கேற்ற பலி நொருங்கிய நெஞ்சமே” கடவுளே! நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை (தி. பா 51:17)

இன்று நாம் காட்டும் விசுவாசம் எமது உணர்ச்சியின் வெளிபாடா? அல்லது உணர்வுகளின் ஒன்றுபட்ட சங்கமமா? இயேசு தமது போதனையில் கடுகளவு விசுவாசம் இருந்தால் இந்த மலையை பார்த்து பெயர்ந்துபோ என்றதும் பெயர்ந்துபோகும் என்கிறார். இங்கு அவர் குறிப்பிடும் நம்பிக்கை உயிருள்ள நம்பிக்கை. சிறு வித்தானாலும் விருட்சமொன்றை உருவாக்கும் தன்மை கொண்டது இயற்கை. இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆன்மாவில் “ஜீவனுள்ள நம்பிக்கை” என்பதை உணரும்போதே எமது விசுவாசங்கள் உரமூட்டப்பெற்று உயிர்பெறும் மாற்றங்களை எம்மிடருந்தே உருவாக்குவோம்.

துன்பங்கள் மத்தியில் நம்பிக்கையை எண்ணும் போது இயேசுவின் சீடர்களின் வாழ்வில் வெளிப்படுத்தப்பட்ட அழகான சம்பவங்கள் காணக்கிடக்கின்றன. இயேசுவும் சீடர்களும் கப்பலில் பயணிக்கின்றனர். எமக்கிருக்கும் அதே பயம் நிறைந்த சூழலே அன்று சீடர்களிடமும் காணப்பட்டது. “ஆண்டவரே, காப்பாற்றும் சாகபோகிறோம்” என்கின்றனர். அன்றும் அந்த கப்பலில் இயேசு இருக்கின்றார். இந்த குழப்பமான சூழ்நிலையிலும் இயேசு எம்மோடு இருக்கின்றார். “நம்பிக்கை குன்றியவர்களே, ஏன் அஞ்சுகிறீர்கள்? என்று எம்மையும் பார்த்து கேட்கின்றார். எனவே இயேசுவின் வினா எம்மை சிந்தித்து நம்பிக்கை பற்றிய வாழ்விற்கு அழைத்து செல்கிறது.

எண்ணங்கள் சக்தி வாய்ந்தவை உள்ளங்களை ஒன்றிப்பவை. எனவே நம்பிக்கையை பற்றி சிந்திக்க தொடங்கியதும் எமது நம்பிக்கை புதுப்பிறப்பையடையும் புதுப்பொலிவு பெறும். எனவே நம்பிக்கை நிறைந்த வாழ்வினால் இறை மனித உறவுகளை கட்டியெழுப்புவோம். நம்பிக்கை எங்கே? என்று கேட்ட நாயகன் நம்மையும் அழைக்கிறார். நம்பி வாழ்வும் பிறருக்கு நம்பிக்கையாக வாழவும் நன்றே என்று நாளைய உலகை உருவாக்கிட நம்பிக்கைக்கு உயிர்கொடுப்போம். நம்மையே தியாக திரியாக அர்ப்பணிப்போம்.

# அன்னையின் ஆரோபணம்

## மண்ணிலிருந்து விண்ணிற்கு

தூய கன்னி மரியாளுக்கு இறைவனோடு இருந்த நல்லுறவையும் மனித மீட்பில் மாதாவின் பங்களிப்பையும் வெளிப்படுத்தும் நான்கு மாதா மறை உண்மைகள் உள்ளன. இவற்றுள் அமலோற்பவம், நித்திய கன்னிமை, இறைவனின் தாய் என்ற நிலைகளை நாம் அறிவோம். நான்காவது மாதா மறை உண்மையான மாதா விண்ணேற்பு பற்றி இக்கட்டுரையில் நாம் காண்போம்.

### நான்காவது மாதா மறை உண்மை

எருசலேமில் மாதாவின் பெயரில் கட்டப்பட்ட ஒரு தேவாலயத்தில் ஆசீர்வதித்தபோது நான்காம் நூற்றாண்டில் மாதாவின் விண்ணேற்பை கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டதாக கருதப்படுகின்றது. இத்திருவிழா அந்தியோக்கியாவில் நான்காம் நூற்றாண்டிலும் பாலஸ்தீனாவில் ஐந்தாம் நூற்றாண்டிலும் உரோமையில் ஏழாம் நூற்றாண்டிலும் கொண்டாடப்பட்டது. இதனை ஆவணி பதினைந்து கொண்டாடுவது சின்ன ஆசியாவில் தான் ஆரம்பமாகியது. “நம் ஆண்டவரான இயேசு கிறிஸ்து மற்றும் புனிதர்களான பேதுரு பவுல் ஆகியோரின் அதிகாரத்தாலும் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தாலும் அமலோற்ப அன்னையும் நித்திய கன்னியுமான மாதா தன் மண்ணுலக திருப்பயணத்தை பூர்த்தி செய்து உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்” என 1854ம் ஆண்டு மாதா அமலோற்பவ அன்னை என்று மறையுண்மையை அறிவிக்கும்போது “மாதா விண்ணேற்படைந்தார்” என்ற மறையுண்மையையும் பாப்பரசர் பன்னிரெண்டாம் பத்திநாதர் பறைசாற்றினார். அது மட்டுமல்லாது மாதாவின் விண்ணேற்பு தொடர்பாக பல ஆய்வு நூல்களையும் எழுதினார். அவற்றுள் கன்னியான இறைவனின் தாய் (Deiparae Virginis), பேரிரக்கமுள்ள கடவுள் (Munificentissimus Deus), என்பவற்றைக் கூறலாம். ஆனால் இவற்றில் எதிலும் மாதா இறந்ததாக பாப்பரசர் கூறவில்லை. அதாவது இறந்தவர்களின் பொதுவான உயிர்ப்பில் பெறும் மாட்சியுற்ற ஆன்மா மற்றும் உடலின் நிறைவை அன்னை தம் மண்ணுலக வாழ்நாளின் இறுதியிலேயே பெற்றுவிட்டதாகவே குறிப்பிடுகின்றார். மாதாவின் மாட்சிமை சாகாமல் கிடைத்த உருமாற்றமா? மாட்சிமையா? அல்லது இறந்தபின் வந்த உயிர்ப்பா? இவை அனைத்தும் எப்படி இருப்பினும் உறுதியான பாரம்பரிய விசுவாசம் என்ன தெரியுமா? மாதா பாவம் எதுவும் இல்லாதவர். அவர் அமலோற்பவ அன்னை என்றாலும் கூட பாவத்தின் கூலியான சாவை அவர் தமது அருமை மகனின் பாதையில் செல்வதற்காக தாமும் ஏற்றுக்கொண்டார் என்பது தான் பொதுவான எண்ணம். பாவம் செய்த மனிதருக்கு வரும் சாவு போன்றதல்ல மாதாவின் இறப்பு இருந்தது. மாதாவின் இறப்பு ஒரு முழுமையான சமர்ப்பணமாக இருந்தது. அதாவது வேலைகள் அனைத்தையும் செய்து முடித்த பின்னர் வரும் ஆழ்ந்த தூக்கத்தைப் போன்றதாக இருந்தது. இயேசுகிறிஸ்து கடவுள் என்பதால் அவர் விண்ணேற்றம் அடைந்தார். மாதா ஓர் ஒப்பற்ற படைப்பு என்பதால் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அதாவது விண்ணேற்பு அடைந்தார். இறைவனால் மட்டுமே செய்யக்கூடிய இந்த மாபெரும் அற்புதத்தை அவர் மாதாவுக்கு செய்தார். மாதாவின் விண்ணேற்பு தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட செயல்பாடு.

### விவிலியத்தில் விண்ணேற்பு

மறையுண்மை எனப் பறைசாற்றப்பட மாதாவின் விண்ணேற்பு திருவிவிலியத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் தெளிவான வெளிப்டையான ஒரு கருத்தை நாம் திருவிவிலியத்தில் காண்பதற்கில்லை. ஆனால் அதே வேளையில் மறைமுகமான சில குறிப்புகள் வேதாகமத்தில் இருப்பதைக் காணலாம். தொ.நூ 3:15இல் பெண்ணுக்கும் பாம்பிற்கும் இடையே நடைபெறும் போராட்டம் 1 கொரி 15:54இல் சாவை வென்றதைக் குறித்து திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார். பாவம் செய்பவர்களுக்கு வருவது இயல்பான சாவு. ஆனால் மாதாவுக்கு இது பொருந்தாது.

### விண்ணேற்பின் பொருள்.

இறைவனின் வாக்குறுதி மாதாவிடம் மிகச் சரியாக நிறைவேறியது. “நம்பிய நீர் பேறுபெற்றவர்” (லூக் 1:45) மாதா உடலிலும் ஆன்மாவிலும் மாட்சி பெற கடவுளின் பேரன்புதான் காரணம். அது மட்டுமல்லாமல் மாதாவுக்கு வழங்கப்பட்ட இறை அழைப்பை அவர் எவ்வாறு ஏற்றுக்கொண்டார் என்பதற்கான பரிசாகவும் விண்ணேற்பு விளங்குகின்றது. மாதாவின் அமலோற்பவமும், நித்திய கன்னிமையும், இறைவனின் தாய் என்ற நிலையும் நிறைபெற வேண்டுமென்றால் மாதா நிச்சயம் விண்ணேற்பு பெற்றார்....



தொகுப்பு : எஸ். பிரவீனா, தரம் 12

தொடர்ச்சி 15ம் பக்கம்

# புனித மோனிக்கம்மாள்

**ஆவணி 27** (333 - 387)

இவள் பத்ரீசியுஸ் என்னும் அவிசுவாசியை மணமுடித்தாள். அவர் கடும் கோபகுணம் படைத்தவர். அவரால் வந்த இக்கட்டுகளையெல்லாம் மோனிக்கா பொறுமையுடன் சகித்தாள். **இவளது நல்வாழ்வும், சாந்த குணமும் இவளுடைய கணவனின் குணத்தை மாற்றியது** அவர் கிறிஸ்தவராகி அடுத்த ஆண்டில் இறந்தார். மகன் அகுஸ்தீன் இவளுக்குப் பெரும் சிலுவையாக இருந்தார்.

**அவர் மனம் திரும்புவதற்காக தாய் உருக்கமாக நெடுங்காலம் செபித்தாள்**

தாயை விட்டு அகுஸ்தீன் இத்தாலி சென்றார். தாய் அவரைத் தேடிச் சென்றாள். மிலான் நகரில் அவரைக் கண்டு ஏற்கனவே ஆயரான புனித அம்புரோஸ் என்பவரது முயற்சியால் அகுஸ்தீன் தமது தப்பறையான கொள்கைகளை விட்டுவிட்டு அடுத்த ஆண்டில் அவர் மனந்திரும்பினார். ஞானஸ்நானம் பெற்றார். சற்றுப் பின் தாயும் மகனும் சில நண்பர்களுடன் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் தன் மகனது கரங்களில் அவள் உயிர் விட்டாள்.

**சிந்தனை :** ஓ ஆண்டவரே தூயவரும் தவ வாழ்க்கை நடத்தியவளுமான ஒரு விதவையின் தாழ்ச்சியுள்ள மன்றாட்டை நீர் புறக்கணிப்பீரோ? அவள் உம்மிடம் பணம் கேட்டு மன்றாடவில்லை. உலக காரியங்களுக்காக செபிக்கவில்லை. தன் மகனுடைய அழியாத ஆன்மா மோட்சம் சேர வேண்டும் என மன்றாடினாள். கண்ணீர் அழுகையுடன் அவள் சமர்ப்பித்த மன்றாட்டை ஏற்றுக்கொண்டீர்.

**செபம் :**

**ஆண்டவரே, தங்கள் மக்களின் உடலை விட ஆன்மாவை அதிகமாக நேசிக்கும் தாய்மாரை உலகக்குத் தாரும்.**



# புனித அகுஸ்தீன்

**ஆவணி 28** (354 - 430)



இவரது தாயார் பெயர் மோனிக்காம்மாள். கார்த்தேஜ் நகரில் கல்வி கற்கும்போது பல தவறுகளைச் செய்தார். இறுதியில் ஒரு மோசமான மார்க்கத்தில் சேர்ந்தார். அவிசுவாசியான தந்தை இவரைக் கண்டிக்கவில்லை. தந்தை இறந்தபின் இவர் கார்த்தேஜ் நகரில் வாழ்ந்து ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். பின் இவர் உரோமை நகருக்கும், மிலான் நகருக்கும் சென்று கல்வி கற்பித்து வந்தார்.

**கடவுளின் அருளும், தாயின் கண்ணீரும் மன்றாட்டுக்களும் புனித அம்புரோஸ் போன்றவர்களின் போதனைகளும் இவரை மனந்திருப்பியது.** இவர் தனியாக இருக்கையில் **எடுத்து வாசி** என்ற அற்புதக் குரல் கேட்டது. அருகில் கிடந்த புனித பவுலின் நிருபங்களை எடுத்துப் படித்தார்.

**பகலில் நடப்பது போல நேர்மையுடன் நடங்கள்**

என்னும் புனித பவுலினது சொற்கள் இவரது கண்களில் பட்டன. அந்த வினாடியிலிருந்து இவரது சந்தேகங்கள் அகன்றது. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்து 387 ஆம் ஆண்டு தனது 33ஆம் வயதில் ஞானஸ்நானம் பெற்றார். 388ல் கார்த்தேஜ் நகரை அடைந்து, பின் தகாஸ்து நகருக்குப் போய் சில நண்பர்களுடன் துறவற வாழ்வு நடத்தினார். 390ல் இவர் குருப்பட்டம் பெற்றார். அதன் பின் நண்பர்கள் பலரோடு ஹீப்போ நகருக்குப் புறப்பட்டார். அங்கும் அவர்களோடு துறவற வாழ்வு நடத்தினார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இவர் ஆயர் பட்டம் பெற்று ஹிப்போ நகரின் துணை ஆயரானார். இதிலிருந்து விடாது உழைக்கத் தொடங்கி தம் சபையை ஆண்டு நடத்தினார். மக்களுக்குப் போதித்தார். அரிய பல நூல்களை எழுதினார். 397ஆம் ஆண்டில் இவர் தாழ்ச்சியுடன் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதினார். அக்காலத்தில் பரவியிருந்த பல தப்பறையான கொள்கைகளை இவர் எதிர்த்துப் போராடினார்.

**சிந்தனை :** பாவியாக இருந்து மனந்திரும்பிய இவர் மிகுந்த ஆர்வத்துடன் கடவுளின் மகிமைக்காக உழைத்து தம் பழைய வாழ்வுக்கு ஈடு செய்தார். பழைய பாவங்களுக்காக இவ்விதம் பரிகாரம் செய்வது எல்லோராலும் முடியுமா....!

**செபம்.**

**ஆண்டவரே, உம்மீது உள்ள அன்பில் நான் பற்றியெரியச் செய்தருளும்.**

# வலிப்பு ஏன் வருகிறது?



கால் கை இழுத்துக்கொண்டு நடுவீதியிலும் பொது இடங்களிலும் அவதிப்படுபவர்களை நாம் பார்த்திருக்கிறோம். கால் கை வலிப்பதால் **காக்காய் வலிப்பு** என்று மாறியிருக்கிறது. இது ஏன் வருகிறது? பயக்கோளாறு, பேய் பிடித்திருக்கிறது” ‘இரத்தப்பலி கொடுத்தால் சரியாகி விடும்’ என்று பலரும் பலவகைகளில் கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாம் பொய் கட்டுக்கதைகள். பக்கத்தில் போனால் தங்களுக்கும் வலிப்பு நோய் தொற்றிக் கொள்ளும் என்று நினைப்பவர்கள் உண்டு. இதுவும் பொய். உண்மையில் வலிப்பு ஒரு நோயே அன்று. மூளையில் தற்செயலாகச் சிலருக்கு ஏற்படும் அதிக மின்னோட்டத்தின் ஓர் அறிமுகம் அவ்வளவுதான். மூளையில் அதிக மின்னோட்டம் இருக்கும்வரை வலிப்புத் தொடர்கிறது. மின்னோட்டம் சீர்பட்டவுடன் வலிப்பு நின்று விடுகிறது. அவ்வளவுதான். கடைசியாக, வலிப்பு நோய்க்கு நிலையான மருந்தே இல்லை என்று பலர் நினைக்கிறார்கள். இதுமிகத் தவறான நம்பிக்கை. எல்லாவகை வலிப்பு நோய்களுக்கும் இன்று மருந்து கண்டு பிடித்திருக்கிறார்கள். வலிப்பு நோயிலிருந்து முழுமையாகக் குணமடையலாம். நல்ல மருத்துவப் பரிசோதனையுடன் வலிப்பு நோய் கண்டவர்கள் திருமணம் செய்துகொண்டு அழகாகக் குடும்பம் நடத்தலாம்.

பொது இடத்தில் ஒருவருக்கு வலிப்பு வருவதைப் பார்க்கிறோம். நாம் என்ன செய்யலாம்? என்ன செய்ய வேண்டும்? முதலில் பயப்படாமல் அவரிடம் செல்லலாம். அவர் நமது அன்புக்கும் உதவிக்கும் உரியவர்தான். அவர் கீழே விழப்போகும்போதே கவனித்துவிட்டால், அவரை தாங்கிப் பிடித்துக் கூடியவரை சமதளத்தில் ஒருக்கணித்துப்படுக்க வைக்க வேண்டும். கீழே விழுந்துவிட்டிருந்தால் அருகில் கரடு முரடான பொருள்களில் மோதிக்கொள்ளாமல் அவற்றை அப்புறப்படுத்த வேண்டும். அவர் கையில் சாவியோ, இரும்புப் பொருள்களையோ திணிக்கக் கூடாது. இதனால் வலிப்பு நிற்காது. இரும்பால் அவர் தன்னையே காயப்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. கை கால்களைக் கட்டிப்பிடித்து வலிப்பை நிறுத்த முயலவே கூடாது. சில நிமிடங்களில் தானாக வலிப்பு நின்று விடும். முடிந்தால் நடுங்கும் பற்களுக்கு நடுவில் ஒரு கைக்குட்டையை மெதுவாகச் செருகலாம் நாக்கை அவர் கடித்துக்கொள்ளாமல் இது தடுக்கும். அவரைச் சுற்றிக் கூட்டம்கூடி நல்ல காற்றைத் தடுக்காமலும், வலிப்பு வந்தவரை அவமானத்துக்கு ஆளாக்காமலும் பார்த்துக்கொள்ளலாம். வலிப்பு நின்ற பின் அவரை அருகில் உள்ள மருத்துவரிடம் அழைத்துப் போகலாம்.

**வலிப்பு வந்தவர், நம்மைப் போன்று நமது அன்புக் குரிய மனிதர் தான். அவரைப் பாதுகாப்பது எளிய பணிதான்.**



### இரத்ததானம் கொடுப்பவர்களுக்கு சில அறிவுரைகள்



- ☹ தாய்ப்பால் ஊட்டும் போது,
- ☹ பெரிய அறுவைச் சிகிச்சை செய்து 06 மாதங்களுக்கும், சிறிய அறிவைச் சிகிச்சை செய்து 03 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில்
- ☹ மலேரியா நோய் சிகிச்சை பெற்ற 12 மாதங்கள் வரை

**இரத்த தானத்தைத் தவிர்க்க வேண்டியவர்கள்**

- ☹ சக்கரை நோய்க் கட்டுப்பாட்டில் இல்லாதவர்கள்
- ☹ நுரையீரல் நோய் உள்ளவர்கள்
- ☹ ஹைபடைடிஸ் பி. சி. வைரஸ் தாக்குதலுக்கு உ்ளானோர்
- ☹ மேலும்.... வாழ்நாள் முழுவதுமாக
- ☹ போதைப் பழக்கம் உள்ளவர்கள்
- ☹ உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொண்டவர்கள்
- ☹ பால்வினை நோய் எயிட்ஸ் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள்.

## 01 ஞாயிறு – போயா...

இவ்வகுப்புக்களை இரத்து செய்யுமாறு கேட்கப்பட்டது. பிரத்தியேக வகுப்புகள் பிரபலமான வியாபாரம் என்றும் அதில் இணையும் மாணவர்களில் அநேகர் ஒழுக்க சீர்கேடு கொண்டவர்களாகவும் சில மாணவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 23ம் திகதி வெளியான பதிலில்; ஞாயிறு - போயா தினங்களில் பிரத்தியேக (உதவி வகுப்பு) தடைசெய்யும் (திருத்தியமைக்கப்பட்ட) மனு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துப்படி ஞாயிறு - போயா தினங்களில் பி. ப. 3.00 மணிவரை உதவி வகுப்புகளை நடத்த தடைவிதித்து முன்வைத்த விடுமுறை தின (திருத்தியமைத்த) மனுவில் உட்பிரிவில் சில வசனங்கள் அரசியமைப்பில் மோதலை ஏற்படுத்துகிறது என கூறி உயர் நீதிமன்றத்தில் (ஆடி 20ம் திகதி) இரண்டு மனுக்கள்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் சந்துன் சேனாதிர அவர்களுக்கு பதிலாக தோன்றிய ஜனாதிபதி வழக்கறிஞர் விஜேதாச ராஜபக்ச கூறுகையில் டியூசன் பிரபலமாக பரந்து விரிந்துள்ளது என்றும் 1 கிலோமீற்றர் தூரத்தில் 200 கட்டவுட்கள் டியூசன் வகுப்புக்கள் உள்ளன என்றும் எஅரசியல் வாதிகளின் போஸ்டர்களை பிரத்தியேக மாஸ்டர்களின் போஸ்டர்கள் தோற்கடித்துள்ளது எனவும் கூறினார். வளர்ச்சியடைந்த நாடுகளில் கல்வி எமது நாட்டு கல்வியிலும் மாறுபட்டது. இதனால் பிள்ளைகளின் மனநிலையில் பாரிய தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. பிரத்தியேக வகுப்பினால் நெறிமுறையின் பெறுமதிகள் அழிந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

நீதிபதிக்கு பதில் நீதிபதி ஜெனரல் ஜனாதிபதி வழக்கறிஞர் சந்திரிகா தெமுனி த சில்வா தனது வாதத்தில்; பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் வரி செலுத்துகின்றனரா? இல்லையா? பற்றி எந்த குறிப்பும் இல்லை எனவும் சுதந்திர தொழிலினால் நீதியை மீறுகின்றார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், அத்துடன் இங்கு கேட்கப்பட்டுள்ளதன்படி, போயா - ஞாயிறு தினங்களில் பி.ப 3.00 மணிக்கு பிறகு பிரத்தியேக நடத்த முடியும் என கூறிய அவர், இதனால் முக்கிய உரிமை மீறல் நடைபெறவில்லை எனத் தெரிவித்தார்.

## 10 விவிலிய வினா விடை

75. உரோமை படையின் 6000 போர் வீரர்கள் கொண்ட பெரும் படை பிரிவு (5:9)
76. இரண்டாயிரம் பன்றிகள் (5:13)
77. தெக்கபொலி (5:20)
78. யாயீர் (5:22)
79. 12 ஆண்டுகள் (5:25)
80. அஞ்சாதீர்! நம்பிக்கையை மட்டும் விடாதீர் (5:36)
81. பேதுரு, யாக்கோபு, யாக்கோபுவின் சகோதரனான யோவான் (5:37)
82. ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை?(5:39)
83. தலித்தாகூம் (5:41)
84. 'சிறுமி! உனக்கு சொல்லுகிறேன் எழுந்திடு! (5:41)

**"திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மட்டுமே, நாங்கள் அதை மாற்ற முடியாது"**

**கத்தோலிக்க திருச்சபையின் திருத்தந்தையின் கருத்து..**

இதே வேளை பல புரட்டஸ்தாந்து சபைகள் ஏற்கனவே ஒரினச் சேர்க்கையை அங்கிகரித்தாகிவிட்டது
பல ஒரினச்சேர்க்கை பாஸ்டர்கள் பல சபைகளில் சபை அங்கிகாரத்தோடே உள்ளமை குறிப்பிடத்தக்கது..
இவ்வருடம் அமெரிக்க புரட்டஸ்தாந்து சபைகளின் சங்கம் இதற்கு வாக்கெடுப்பு அவர்களுக்குள் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது..

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

## 03 வன்முறை

'லாஸ்ட் சப்பர்' என்னும் ஓவியத்தை... லியானார்டோ டாவின்சி தீட்டுகிறபோது நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒருவன் மீது நிறையக் கோபம் கொள்ளுகின்ற சூழல் டாவின்சிக்கு ஏற்பட்டது. மிகக் கடுமையாக அவனை வைதுவிட்டு, திரும்ப வந்து ஓவியத்தைத் தொடர்ந்தார்.

இயேசு கிறிஸ்துவை வரைகின்றபோது அவர் எவ்வளவு முயன்றாலும் தன்னுடைய ஓவியத்திறமையைத் செலுத்தியும் அந்த ஓவியம், நிறைவைத் தரவில்லை. முயன்று முயன்று தோற்றார். தோற்றுத் தோற்று உணர்ந்தார். உணர்ந்து உணர்ந்து வருந்தினார். தான் வைத அந்த மனிதனை அழைத்து அவனுக்குப் பழங்களையும், இனிப்புக்களையும் தந்து மன்னிப்புக்கு கேட்டார்.

அவன் முகத்தில் மலர்ச்சியைக் கண்டார். தன் மீது அவன் கொண்டிருந்த வருத்தம் நீங்கியதைக் கண்டார். மேகம் விலகித் தெரிகிற நிலவுபோல் அவன் முகம் நிறைவால் மின்னியதைக் கண்டார். தூரிகை எடுத்து ஓவியத்தைத் தொடர்ந்தார். உலகம் புகழும் உன்னத ஓவியம் அவரது கைகளால் தீட்டப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் கருணை வழிகின்ற கண்கள் அவரது கைகளில் அடங்கியது.

'ஓஷோ' ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவதுண்டு. திபெத்தியர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. அவர்கள் உறக்கத்தில் யாரையாவது துன்புறுத்துவது போல கனவு வருமேயானால், அடுத்த நாளே தமது கனவில் வந்தவரைச் சென்று சந்தித்து அவர்களுக்குப் பழங்களைக் கொடுத்து, நேற்று என் கனவில் நான் உங்களிடம் கோபம் கொண்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று சொல்லி உபசரித்துவிட்டு வருவார்கள்.

கனவில் வந்ததால் எங்கேயும் ஒரு மூலையில் தன் மூளையில் அவர்கள் மீது துவேஷம் ஏற்பட்டிருக்க வேண்டும். வெறுப்பான விதை எழுந்திருக்கவேண்டும், கோபத்திற்கான கொழுந்து முளைவிட்டிருக்க வேண்டும். வன்மத்திற்கான வயல் நடவு செய்யப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் கனவில் அந்தச் சம்பவம் அவ்வாறு வந்திருக்கிறது என்று நினைத்து அதைக் களைவதற்கு திபெத்தியப் பழங்குடி மக்கள் அவ்வாறு விநியோகிப்பது உண்டு.

நீரினால் நெருப்பை அணைப்பது போல நடக்கிற ஒன்று. அன்பை விநியோகிக்க நினைத்தால், நம் மனதில் இருக்கின்ற வன்மம் குறையும். வன்மம் கரையும், வன்மம் அகலும். நாம் அன்புமயமாக மாறுகிறபோது, நம் எதிரே இருப்பவர்களும் அன்புமயமாக மாறுவார்கள். நாம் புன்னகைக்கிறபோது, எதிரே வருபவனும் புன்னகைத்தே தான் தீருவான். அப்போதுதான் உலகம் முழுவதிலும் இருக்கின்ற வன்முறைகள் - வன்மங்கள் குறையும்.

இதை நாம் உயிரற்ற பொருட்களின் மீதும், வாய் இல்லாத ஜீவன்களின் மீதும் காட்ட முற்படுவோமேயானால், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடாவிட்டால், தண்ணீர் ஊற்றவாவது முன்வருவோமேயானால், ஒவ்வொருவர் இதயத்திலும் நம்பிக்கை முளைக்கும் அன்பு கிடைக்கும்.

## 11 முடிவல்ல இடைவேளை!

நேரத்தைச் செலவிடத்தான். ஆனால் சோம்பிக் கிடப்பதற்காக அல்ல. பொழுதுபோக்கு இரண்டு வகை. நாம் வெட்டியாக உட்கார்ந்து மற்றவர்கள் திறமையை ரசிப்பது முதல் வகை. இதைச் செயல்படாத பொழுதுபோக்கு எனலாம். தொலைக்காட்சி பார்ப்பது, சினிமா பார்ப்பது, கிரிக்கெட் பார்ப்பது, அரட்டை அடிப்பது இதெல்லாம் இந்த வகையைச் சாரும். இது அறவே கூடாது என்பதில்லை. ஆனால் இதுவே வாழ்க்கையாகிவிடக் கூடாது.

நமக்குப் பிடித்த, நமக்குப் பயிற்சியாகவும் அமைகின்ற பொழுதுபோக்குகளைத் தேர்ந்தெடுக்கலாம். கதை படிக்கலாம். கணினிப் பயிற்சிக்குப் போகலாம். மொழிப் பயிற்சிக்குப் போகலாம். விடுமுறையிலும் படிப்பு, படிப்பு, படிப்பேதானா என்று தோன்றுகிறதா? சரி! ஏதாவது ஒரு விளையாட்டில் பயிற்சி செய்யுங்கள். ஓடுங்கள்! நீந்துங்கள்! தாவுங்கள்! தாண்டுங்கள்!

இசைப் பயிற்சி, நடனப் பயிற்சி, ஓவியப் பயிற்சி! எந்தப் பயிற்சி உங்களுக்குப் பிடிக்கிறதோ, அந்தப் பயிற்சிக்கான வாய்ப்புகளை ஆராயுங்கள். பெற்றோரிடம் பேசி முடிவு செய்யுங்கள். பெற்றோருக்கும் ஒரு வார்த்தை. படிப்பு, வகுப்புப் பாடம் என்பது எல்லா மாணவர்களுக்கும் ஒரு வகைக் கட்டாயப் பணியாகப் போய் விடுகிறது. இதில் நம் பிள்ளைகள் விரும்பித் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புக்கள் குறைவு.

குழந்தைகளிடம் ஏதாவது தனித்திறமைகள் ஒளிந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு விடுமுறை ஒரு நல்ல வாய்ப்பு! அவர்கள் எந்த வகைப் பயிற்சிகளில் சேர வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள். அவர்கள் விரும்பி எதைக் கற்றுக்கொள்கிறார்கள் என்று பாருங்கள். உங்கள் குழந்தைகளுக்குள்ளேயே பல திறமைகள் ஒளிந்திருக்கலாம். அதை வெளிக்கொண்டுவர வாய்ப்பளியுங்கள். குழந்தைகள் சோம்பிக்கிடக்கவும் கூடாது. வெட்டியாக ஊர் சுற்றிக் கெட்ட பழக்கங்களை வளர்த்துக் கொள்ளவும் கூடாது. நல்ல திறமைகள் எதை வேண்டுமானாலும் வளர்த்துக் கொள்ளட்டும். வாய்ப்புக்கொடுங்கள்.



## மணமகன் தேவை

கண்டியில் 1989ல் பிறந்த அழகும் அடக்கமும் நிறைந்த சர்வதேச பாடசாலை ஆசிரியையான கத்தோலிக்க மகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு : 0716293620 (23287)

## வாடகைக்கு

120, பிரதான வீதி, பொரளஸ்கமுவ, திவுலப்பிடியவில் 3 படுக்கை அறைகள், 2 குளியல் அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0779300942, 0719891307 (22073)

**முகத்துவாரம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 203வது வருடாந்த திருவிழா – 2019**



**கொடியேற்றம் :**
22.08.2019

**நேரம் :**
மாலை 4.00 மணி
திருப்பலியின் பின்
கொடியேற்றப்படும்.

**நவநாட்கள் :**
23.08.2019 மாலை 6.15 மணிக்கு சிங்கள மொழியில் ஒப்புக்கொடுக்கப்படும்.

தொடர்ந்து 09 நாட்கள் நவநாட் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

**மாலை ஆராதனை :**
31.08.2019 மாலை 7.00 மணிக்கு சிங்கள மொழியில் இடம்பெறும்.

**திருவிழா திருப்பலிகள் : 01.09.2019**
காலை 6.30 மணி (சிங்களம்)
காலை 8.30 மணி (சிங்களம்)
காலை 11.00 மணி (தமிழ்) திருவிழாத் திருப்பலி

மாலை 4.00 மணி சிங்கள மொழி திருப்பலியின் முடிவில் ஆலயத்திற்குள் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தின் பின் திருச்சுரூப ஆசீர்வாதத்தோடு திருவிழா முடிவுபெறும். எனவே புனிதரின் ஆசி பெற அன்புடன் அழைக்கின்றோம். (SM006)

## 05 குருக்கள் துறவி...

விசேட செபப்புத்தகங்களும் வழங்கப்பட்டன, இதையிட்டு அனைவரும் தங்களது நன்றியையும் பராட்டையும் தெரிவித்தனர். "Baptised and sent" எனும் பிரதான தலைப்பின் மூலம் இலங்கை பாப்பிறை மறைபரப்பு சபைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கு இன்னுமொரு மைல்கல் தூரத்தை தாண்டக்கூடியது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.


## 13 அன்னையின்...

அதனாலேயே திருத்தந்தை பின்வருமாறு எழுதினார் "மனிதர் அனைவரும் மீட்பு பெற கடவுளின் வாக்கு மரியன்னையின் திருவயிற்றில் மனிதனாக பிறந்தது என்றால் அந்த இறைவனின் தாயின் உடல் எவ்வாறு அழுக இயலும்? ஒரு பாவமும் இல்லா அத்தாயின் உடல் அழியலாமா? தமது கன்னிமையை தன் மகனுக்காக ஒப்புக்கொடுத்த அன்னைக்கு இருந்தது ஒரேயொரு எண்ணம்தான். உலக மீட்பரை பற்றிய எண்ணமே அது. ஒரு நுணியளவும் பிசகாமல் இயேசுவைப் பின்பற்றியவர் மாதா ஒருவரே. அப்படியானால் விண்ணக மாட்சிக்கு இயேசு தம் தாயை அழைக்காமல் இருப்பாரா? மாதாவுக்கு விண்ணக மாட்சியைவிடக் குறைந்த பரிசை அளிக்க இயலுமா?" என்றார்.

**இன்றும் மீட்பில் அன்னை**

"ஆம், ஆதலால் அன்றிலிருந்து இன்றுவரை மீட்பில் பங்காற்றுவது தெளிவான உண்மையாகும். மேலும் இன்றுவரை மரியாளின் பக்தி முயற்சிகளுக்கு காரணம் தூய ஆவியே. அன்று எலிசபெத்தை சந்தித்தபோது "இதுமுதல் எல்லா தலைமுறையினரும்" என்னை பேறுபெற்றவர் என்பர்" என்று அன்றே தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுக் கூறினார். அது இன்றும் நடைபெறுகின்றது. இவையன்றி கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூல் 966இல் "அனைத்து சென்ப தோஷத்திலிருந்தும் பாதுகாக்கப்பட்ட அமல உற்பவியான கன்னிமரியா தமது இவ்வுலக வாழ்வின் முடிவில் தம் ஆன்ம உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். இதனால் பாவத்தையும், மரணத்தையும் வென்றவருமான தமது மகனின் உயிர்ப்பில் பங்கு பெறுதலும், ஏனைய கிறிஸ்தவர்களது உயிர்ப்புக்கு முன்னடையாளமுமாகும்". மேலும் அன்னை இன்றும் பலருக்கு காட்சியளித்து செபமாலை செபிப்பதை வலியுறுத்தி மனித மீட்பில் பங்குகொள்கிறாள். இது தெவிட்டாத மெய்யாகும். எனவே நாமும் செபமாலையை இன்றே கையில் எடுப்போம்.


வாழ்க! வாழ்க! வாழ்க! மரியே!




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



## திருமண சேவைகள்

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**
















| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்